KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
jeya.sivasothy@aaxelinsurance.com www.aaxelinsurance.com
AAXEL

மலர்:- 32, 31 ஜனவரி 2025 இதழ்:- 05

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: பரமேஸ்வரன் 416 841 9600

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! பெப்ரவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக் குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 14வது வருடத்தில் தொடரும் சேவை ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள்.விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE REALTY INC BROKERAGE
3-1286 Kennedy Rd. Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham M.A.Sc. (Eng.), P.Eng.
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins
Manulife
Foresters

BUYING OR SELLING
Indra Michael Xavier
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## NPP அரசாங்கம் ஏன் மக்களிடம் வேகமாக தோல்வியடைந்து வருகிறது?



பல முக்கிய மற்றும் பல இரண்டாம் நிலை காரணிகள் அவற்றின் தோல்விக்கு பங்களிப்புச் செய்தன. அதில் முக்கிய விஷயம் என்னவென்றால், முந்தைய அரசாங்கங்களை விமர்சிப்பதைத் தவிர, தங்களது அரசாங்கத்தை நடத்துவதற்கு NPP அணி யினரிடம் எந்த ஏற்பாடுகளோ அல்லது திட்டமோ இருக்கவில்லை.

குறைந்த பட்சம் அனுர ஜனாதிபதியான பிறகு காலியாக இருந்த நாடாளுமன்ற ஆசனத்திற்கு கூட ஒருவரை நியமிக்க அவர்களால் முடியவில்லை. இதற்குக் காரணம் (9ம்பக்கம் பார்க்க)

ஈழநாடு பத்திரிகையை வாரம் தோறும்
eelanadu.ca
மின்னிதழ் மூலம் வாசிக்கலாம்

## புலிகளின் மீள் எழுச்சி குறித்த தகவல்கள் இருந்தால் நீதிமன்றத்தின் ஊடாக நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்துங்கள்- மகிந்தாவிடம் அநுர



மீளப் பெறப்பட்ட தனது பாதுகாப்பு பிரிவை மீள வழங்குமாறு உத்தர விடக் கோரி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் மனு குறித்த வழக்கு நாட்டுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும். (6ம் பக்கம் பார்க்க)

## மகிந்தா! பூதங்களைப் போன்று இல்லங்களைப் பிடித்து வைத்துக் கொண்டிருக்காது ஒழுக்கமாக வெளியேறுங்கள்

ஹேமா பிரேமதாசா கோட்டாபய ராஜபக்ஷ ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒரு சட்டமும், சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மைத்திரிபால சிறிசேன மற்றும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு பிறிதொரு சட்டமும் இல்லை. கடிதம் மூலம் அறிவித்தால் தான் அரசாங்கத்துக்கு சொந்தமான இல்லங்களிலிருந்து வெளியேறுவதாகக் குறிப்பிடுவது அவர்கள் வகித்த (7ம்பக்கம் பார்க்க)



## கனடாவின் தேர்தல் தலையீட்டை நிராகரிக்கும் இந்தியா!

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representative*



## PROFESSIONAL AGENT!
## PREMIER RESULTS !!

**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com
**Bus: 416-289-3333**


22 Years Real Estate Experience


RE/MAX REALTRON Realty Inc. Brokerage
Home of the Top Producers
885 Progress Ave #209, Scarborough, ON. M1H 3G3
Independently owned and operated


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


### Warden/Finch


**Scarborough** **$449,900**
2 Beds • 1 Baths • 6 Rooms
Walking distance to school

### Eglinton/Markham

**Scarborough** **$475,000**
2 Beds • 2 Baths • 6 Rooms
Renovated throughout the years

### Westney Rd / Kingston Rd

**Ajax** **$489,000**
2 Beds • 2 Baths • 6 Rooms
Closer to Highway 401

### Markham / Ellesmere

**Scarborough** **$529,990**
1+1 Beds • 2 Baths • 4 Rooms
Brand New Penthouse unit

### Mccowan & Hwy 401

**Scarborough** **$549,900**
2 Beds • 2 Baths • 5 Rooms
Corner suite, unobstructed views

### Kennedy / 401

**Scarborough** **$599,000**
2 Beds • 2 Baths • 6 Rooms
Corner unit offers a prime location

### Markham & 14th Avenue


**Markham** **$649,000**
2+1 Beds • 2 Baths • 5 Rooms
Open-concept living and dining


### Cornell Meadows / 9th Line

**Markham** **$668,000**
2 Beds • 3 Baths • 7 Rooms
Upgraded floor, Newly renovated

### Markham & Sheppard

**Scarborough** **$679,900**
3+1 Beds • 1 Baths • 6 Rooms
New Laminate Floors Throughout

### Altona & Finch

**Pickering** **$789,900**
3 Beds • 4 Baths • 8+2 Rooms
Freehold Townhouses

### Guildwood Village

**Scarborough** **$999,000**
3+1 Beds • 2 Baths • 6 Rooms
Basement with separate entrance

### Markham & Ellesmere

**Scarborough** **$1,050,000**
3+1 Beds • 2 Baths • 6 Rooms
Fin.basement with sep.entrance

### Morningside/Mcnicol


**Scarborough** **$1,099,900**
3 Beds • 3 Baths • 7+2 Rooms
Hardwood flooring throughout

### Simcoe / Winchester

**Oshawa** **$1,149,000**
4 Beds • 4 Baths • 8 Rooms
Easy access to the new 407

### Glen Dhu Dr/Flint Cres

**Whitby** **$1,188,000**
4 Beds • 3 Baths • 8 Rooms
Over $130k on Renovations

### 9th Line/Hoover Park

**Stouffville** **$1,339,000**
4 Beds • 3 Baths • 9 Rooms
Beautifully Landscaped Exterior

EELANADU
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

# கனடாவின் தேர்தல் தலையீட்டை நிராகரிக்கும் இந்தியா!



கனேடியத் தேர்தலில் இந்தியாவின் தலையீடு இருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்ட கனடாவின் அறிக்கையை இந்திய வெளிவிவகார அமைச்சகம் நேற்று முன்தினம் 29 ஜனவரி 2025 புதன்கிழமை நிராகரித்தது.

அதேநேரம் புது டெல்லியின் உள் விவகாரங்களில் தலையிடுவதாக ஒட்டாவா மீதும் குற்றம் சாட்டியுள்ளது. இந்திய வெளிவிவகார அமைச்சகத்தின் அதிகாரபூர்வ செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் இது குறித்து பகிர்ந்துள்ள அறிக்கையில்,

இந்தியாவின் உள் விவகாரங்களில் கனடா தொடர்ந்து தலையிட்டு வருகிறது. இது சட்டவிரோத இடம்பெயர்வு மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களுக்கான சூழலை உருவாக்கியுள்ளது.

இந்தியா மீதான கனேடிய அரசாங்க அறிக்கையின் உள்நோக்கங்களை நாங்கள் நிராகரிக்கிறோம். மேலும், சட்டவிரோத இடம் பெயர்வுகளை செயல்படுத்தும் ஆதரவு அமைப்பு மேலும் கவனிக்கப்படாது என்று எதிர்பார்க்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனேடிய செய்தித்தாள் தி குளோப் அண்ட் மெயில், ஒரு கூட்டாட்சி தேர்தலில் மூன்று அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களுக்கு மறைமுகமான நிதி உதவியை வழங்குவதற்கு ப்ராக்ஸி கணினி மென்பொருள் சேவர்களை பயன்படுத்தியதாக குற்றம் சாட்டியது.

இந்த விவகாரத்தில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ சீனா, ரஷ்யா மற்றும் பிற நாடுகளின் தேர்தல்களில் தலையீடு செய்ததாக எழுந்த குற்றச்சாட்டுகளுக்கு விசாரணை கமிஷன் தலைவராக நீதிபதி மேரி-ஜோஸ் ஹோக்கை 2023 செப்டம்பரில் நியமித்தார்.

கமிஷனர் மேரி-ஜோசி ஹோக் தலைமையிலான விசாரணை, ி2021 தேர்தலின் போது விருப்பமான வேட்பாளர்களுக்கு இரகசியமாக நிதி உதவி வழங்குவதற்கு ப்ராக்ஸி சேவர்களை பயன்படுத்த இந்திய அரசாங்கம் முயற்சித்திருக்கலாம் என்று குற்றம் சாட்டியுள்ளது.

கனடாவில் தேர்தல் தலையீட்டில் ஈடுபடும் இரண்டாவது மிகவும் வினைதிறனான நாடாக இந்தியாவை முத்திரை குத்தியது. கனடாவின் வெளிநாட்டு தலையீட்டின் முக்கிய வடிவமாக இந்தியாவும் தவறான தகவல்களைப் பயன்படுத்துகிறது என்று அறிக்கை மேலும் கூறியது.

காலிஸ்தானி பிரிவினைவாதம் பற்றிய இந்தியாவின் தேசிய பாதுகாப்பு கவலைகள் தொடர்பாக நாடுகளுக்கு இடையிலான உறவுகளில் உள்ள சவால்கள் குறித்தும் அறிக்கை குறிப்பிடுகிறது.

காலிஸ்தானி பயங்கரவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டதில் இந்திய முகவர்களுக்கு தொடர்பு இருப்பதாக 2023 இல் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூறியதிலிருந்து இந்த அறிக்கை இந்தியாவிற்கும் கனடாவிற்கும் இடையிலான அண்மைய பிரதான புள்ளியாக மாறியுள்ளது.

# நான் பிரதமரானால் இலங்கையை சர்வதேச நீதிமன்றத்துக்கு கொண்டு செல்வேன் கனடா கொன்சவேட்டிவ் கட்சித் தலைவர் பியெர் பொய்லிவ் தெரிவிப்பு!

அடுத்த தேர்தலில் தான் பிரதமராக தெரிவு செய்யப்பட்டால் இலங்கையில் போர் குற்றங்களில் ஈடுபட்டதாக குற்றஞ் சாட்டப்பட்டிருக்கும் தரப்பினரை சர்வதேச நீதிமன்றத்துக்கு கொண்டுச் செல்வதற்கு அவசியமான தலைமைத்துவத்தை வழங்கத் தயாராகவிருப்பதாக கனடாவின் பிரதான எதிர்க்கட்சியான கொன்சவேட்டிவ் கட்சியின் தலைவர் பியெர் பொய்லிவ் தெரிவித்துள்ளார்.

தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கனடாவின் டொரன்டோ நகரில் 'ஹார்வெஸ்ட் ஒ·ப் ஹோப்' எனும் மகுடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையிலேயே பியெர் பொய்லிவ் மேற்கொண்டவாறு தெரிவித்தார். தமிழ் மக்களுக்கு எதிராக இனப்படுகொலையை நிகழ்த்திய இலங்கை அரசாங்கத்தை தனிமைப்படுத்தி தண்டிக்கும் நோக்கில் 2013 ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டை கனடாவின் முன்னாள் பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் புறக்கணித்தமையினை நினைவுக் கூர்ந்த பியெர் பொய்லிவ், கனடாவின் வளர்ச்சிக்கு தமிழ் மக்கள் ஆற்றிய பங்களிப்பினை பெரிதும் பாராட்டினார்.

அத்தோடு தமிழ் மக்களுக்கு எதிரான குற்றங்களைப் புரிந்த ராஜபக்ஷர்களையும், ஏனைய குற்றவாளிகளையும் சர்வ



தேச நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு அவசியமான தலைமைத்துவத்தை கொன்சவேட்டிவ் கட்சியின் பிரதமரான நான் வழங்குவேன் எனவும் பியெர் பொய்லிவ் உறுதியளித்தார்.

# யாழில் போராட்டத்திற்கு தடை விதிக்க நீதிமன்றம் மறுப்பு!

யாழ்ப்பாணத்தில் இன்று 31 ஜனவரி 2025 வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள கவனயீர்ப்பு போராட்டத்திற்கு தடை விதிக்க கோரிய பொலிஸாரின் மனுவை யாழ். நீதவான் நீதிமன்று தள்ளுபடி செய்துள்ளது.

யாழ்ப்பாணத்திற்கு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க விஜயம் செய்யவுள்ள நிலையில் வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுக்க திட்டமிட்டு இருந்தனர்.

இந்நிலையில் புதன்கிழமை, நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன், வடக்கு மாகாண வேலையில்லா பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் ச.சசிகரன், போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் பிரபாகரன், குரலற்றவர்களின் குரல் அமைப்பின் தலைவர் முருகையா கோமகன், தற்காலிக சுகாதார உத்தியோகஸ்தர்கள் சங்க தலைவர் எஸ்.ஜெஸ்மின் ஆகிய ஐவரின் பெயரை குறிப்பிட்டு வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் போராட்டங்களை நடாத்த தடை விதிக்க வேண்டும் என பொலிஸார் மன்றில் மனு தாக்கல் செய்தனர். குறித்த மனு மீதான விசாரணைக்காக பெயர் குறிப்பிட்ட ஐந்து நபர்களையும் மன்றில் முன்னிலையாகுமாறு மன்று அழைப்பு கட்டளை விடுத்திருந்தது. அந்நிலையில் குறித்த வழக்கு நேற்றைய தினம் வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளை, அழைப்பு கட்டளை வழங்கப்பட்ட நபர்கள் மன்றில் முன்னிலையாகி இருந்தனர்.

அதில் வேலையற்ற பட்டதாரிகள் சங்க தலைவரின் சார்பில் மன்றில் முன்னிலையான சிரேஷ்ட சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் வேலையற்ற பட்டதாரிகள் தமது கோரிக்கையை (22ம் பக்கம் பார்க்க)

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

1 SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)

2 NEW OCEAN SUPER MARKET
5635 FINCH Ave
(MARKHAM / FINCH Ave)

3 AGP MART
4A WADE AVE
TORONTO

4 KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO

5 UTHAYA SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

Balachandran Law Office
Balachandran Muthaiah
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544


# தமிழரசுக்கட்சியின் முடிவுக்காக பிற்போடப்பட்ட கலந்துரையாடல் கொள்கை ரீதியான இணக்கப்பாடு இல்லாமல் இணைய முடியாது!

தமிழரசு கட்சியின் முடிவுக்காக தமிழ் தேசிய கட்சிகளின் கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளது. தமிழ் தேசிய மக்கள் முன்ணணியின் ஏற்பாட்டில் தமிழ் தேசிய கட்சிகளுடனான கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட இருந்தது. அந்நிலையில் தமிழரசு கட்சி தமக்கு உத்தியோக பூர்வமாக அழைப்பு கிடைக்க



வில்லை என தெரிவித்தது.

அதனை அடுத்து கடந்த சில தினங்களுக்கு முன்னர் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் கட்சியின் செயலாளரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்லவராச கஜேந்திரன் ஆகியோர் , தமிழரசு கட்சியின் பதில் தலைவரும் வடமாகாண சபையின் அவைத் தலைவருமான சி.வீ.கே சிவஞானத்தின் வீட்டிற்கு நேரில் சென்று கலந்துரையிடலுக்கு அழைப்பு விடுத்திருந்த நிலையில் 27 ஜனவரி 2025 திங்கட்கிழமை கலந்துரையிடலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் திங்கட்கிழமை தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை தொலைபேசியில் தொடர்பு கொண்ட தமிழரசு கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே சிவஞானம் தமது கட்சி சார்பில் இன்றைய கலந்துரையாடலில் கலந்து கொள்ள முடியாது எனவும், எதிர்வரும் 08ஆம் திகதி தமிழரசின் மத்திய செயற்குழு கூட்டம் நடைபெறவுள்ளதால் கலந்துரையாடல் தொடர்பில் கூட்டத்தில் முடிவெடுத்து அதன் பிரகாரம் எமது கட்சியின் நிலைப்பாட்டை தெரிவிக்க முடியும் என கூறியுள்ளார்.

இது தொடர்பில் கலந்துரையாடலுக்கு சமூகமளிக்க இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சிவஞானம் சிறிதரன் ஆகியோருக்கு கஜேந்திரகுமார் தெரிவித்ததை அடுத்து 08ஆம் திகதி தமிழரசு கட்சி தனது முடிவினை அறிவித்த பின்னர் கலந்துரையாடலை மேற்கொள்வோம் என கூறியுள்ளதால் கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளது.

இதேவேளை கொள்கை ரீதியான இணக்கப்பாடு இல்லாமல் கட்சிகள் ஒன்றிணைவது தொடர்பில் சிந்திக்க முடியாது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் 28 ஜனவரி 2025 செவ்வாய்க்கிழமை ஊடகவியலாளர்களுடனான கலந்துரையாடலின் போதே அவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும்



தெரிவிக்கையில்,

அதாவது அரசியலமைப்பு ஒற்றையாட்சி முறைமையாக அமைய போகிறது. நாடாளுமன்றில் அநுர தரப்பு அதீத பெரும்பான்மையுடன் உள்ளது. அவர்களுக்கு எமது தரப்பின் ஆதரவு தேவையில்லை. அந்த நிலையில் தமிழர் தரப்பில் நாடாளுமன்றில் உள்ள 19 உறுப்பினர்களில் குறைந்த பட்சம் 10 உறுப்பினர்களாவது ஒன்றிணைந்து வரவுள்ள ஒற்றையாட்சியை எதிர்க்க வேண்டும். அதற்காகவே தமிழ் தேசிய கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒன்றிணைத்து, வரவுள்ள அரசியலமைப்பு தொடர்பில் கலந்துரையாட முயற்சிகளை முன்னெ டுத்து வருகிறோம்.

உள்ளூராட்சி தேர்தல்கள் தொடர்பில் நாம் சிந்திக்கவில்லை. தற்போது வரவுள்ள அரசியலமைப்பு எவ்வாறு அமையவுள்ளது என்பது தொடர்பிலையே சிந்திக்கின்றோம்.

எங்கள் கட்சிகள் உறுப்பினர்கள் கொள்கைகள் மீது பலருக்கும் விமர்சனங்கள் இருக்கலாம். ஆனால் பொதுவாக தமிழ் மக்களின் இருப்பை இல்லாதாக்கும் அரசியலமைப்பை தமிழ் மக்களாக நாம் ஒன்றிணைந்து எதிர்க்க வேண்டும்.

ஒற்றையாட்சி சிந்தனையோடு வரும் எந்த அரசியலமைப்பை ஏற்க முடியாது. சமஷ்டி தீர்வை மாத்திரமே ஏற்றுக்கொள்வோம். சமஷ்டி என்பதில் எந்த ஒளிவுமறைவும் இன்றி நேரடியாக சமஷ்டி தீர்வாகவே தீர்வுத் திட்டம் முன் வைக்கப்பட வேண்டும்.

தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத் திட்டமானது, இது வரையிலான தீர்வு திட்டங்களில் சிறப்பானது. அதனை வைத்து அதில் திருத்தங்களை கொண்டு வரவேண்டும். குறிப்பாக அதில் மலையக மற்றும் முஸ்லீம் மக்களின் கருத்துக்கள் உள்வாங்கப்பட்டு, அதனை பூரணப்படுத்த வேண்டும். அவ்வாறு பூரணப்படுத்தப்பட்டால் அதனை தமிழர்களின் தீர்வு யோசனையாக முன் வைக்க முடியும் என தெரிவித்தார்.



# இதயத்தைப் பிழிந்த துயரச் செய்தி! மாவை அண்ணர் மறைவு!



1975ம் ஆண்டு காலப்பகுதியில் தமிழீழத் தேசம் அடிமைத் தளையை அறுத்தெறிந்து விடுதலை பெறத் துடித்தெழுந்த காலம். அந்தத் தேசத்தில் விடுதலைப் போராட்டம் வேகம் பெற்றிடுவதற்கேற்ப தனது வீரமிக்க – உணர்ச்சிப் பேச்சுக்களால் என்னைப் போன்ற அன்றைய மாணவர்களுக்கு –இளைஞர்களுக்கு மாவை அண்ணர் ஒரு ஆதர்ச புருஷராகவே விளங்கினார்.

நீண்டு நிமிர்ந்த தோற்றம் – தோளில் சுருள் சுருளாக படர்ந்த சடாமுடி – கருந்தாடி – நெற்றியிலே சிகப்புப் பட்டி கூட்ட மேடைகளுக்கு தன் கைகளைப் பின்னால் கட்டியபடி அவர் நடந்து வருகின்ற காட்சி இன்றும் நெஞ்சில் பசுமையாய் நிறைந்திருக்கின்றது.

தமிழினத்தின் விடுதலை பற்றி மேடைகளில் முழங்கியதுடன் தனது கடமை முடிந்து விட்டது என்று என்று அவர் இருந்தவர் அல்ல. கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக தமிழரசுக் கட்சியின் தொண்டனாக – தமிழர் விடுதலைக் கூட்டணியின் துணாக – தமிழ் இளைஞர் பேரவையின் தலைவராக – சாத்வீகப் போராட்ட காலத்தின் முன்னணி படை வீரராக அவர் பயணித்திருக்கின்றார்.

விடுதலைப் போராட்டத்திற்கு நேர்ந்து விட்ட பலிக் கடாவாக தன்னை ஆக்கிக் கொண்டு ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக சிறைச்சாலை – சித்திரவதை – அடி உதையென அத்தனை அடக்கு முறைகளையும் துன்பங்களையும் தாங்கிக் கொண்டு துடித்தெழுந்த தமிழீழ இளைஞர்களின் விடுதலை உணர்வின் ஈட்டி முனையாக விளங்கியவர் அண்ணர் மாவை அவர்கள்.



1976ம் ஆண்டளவில் சிறையில் இருந்து அவரும் வண்ணை ஆனந்தன் அவர்களும் வெளிவந்த நேரம். யாழ்.புகையிரத நிலையத்தில் மாபெரும் வரவேற்பு அண்ணர் அமிர்தலிங்கம் தலைமையில் ஏற்பாடாகி இருந்தது. வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வரையிலான நிலையங்களில் மக்கள் பெருமளவு திரண்டு வரவேற்பளித்தார்கள். புகையிரதப் பெட்டிகள் தொண்டர்களால் நிரம்பி வழிந்தது.

யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்தில் நிற்கப் பொறுமை இழந்த நான், எனது மைத்துனர் நந்தன், விடுதி நண்பன் இந்திரன், விமல், வரதராஜன் ஆகியோர் கொடிகாமம் புகையிரத நிலையம் சென்று மாவை அண்ணருக்கும் வண்ணை ஆனந்தன் அண்ணருக்கும் இரத்தப் பொட்டு வைத்த நிகழ்வு மறக்க முடியாத ஒன்று.

மாவை அண்ணர் கூட்டங்களில் பேசுகின்ற போது பாசிசம், ஏகாதிபத்தியம் அடக்குமுறை, இன வெறி அனைத்தையும் முறியடித்து சுதந்திரத் தமிழீழத்தை அடைந்தே தீருவோம் என்று அவர் முழங்குகின்ற போது கியுபாவின் புரட்சியாளன் சேகுவேரா – பொதுவுடைமைத் தாயகமாம் ரஸ்யாவின் தந்தை மாமேதை லெனின் – மக்கள் ஆட்சித் தத்துவம் படைத்த ஆபிரகாம் லிங்கன் என வரலாற்றில் படித்த அத்தனை மாமனிதர்களும் கண் முன்னே தோன்றுவார்கள்.

1970களில் அண்ணர் மாவை சேனாதிராஜாவின் எழுச்சியும் அவர் சிறைகளில் அடைக்கப் பட்டதும் சிறை மீண்டு வந்து சுதந்திரம் வேறொருவர் கொடுக்க நாம் பெற்றுக் கொள்ளும் சுக்குமல்ல மிளகுமல்ல மக்களின் போராட்ட எழுச்சிகளாலும் தியாகங்களினாலும் விடாமுயற்சியாலும் தமிழ்மக்கள அடையும் ஓர் உன்னத நிலை தான் என்று அவர் எழுப்பிய குரல் பின்னாளில் ஆயிரம் ஆயிரம் இளைஞர்கள் விடுதலைப் புலிகளாகவும் வேங்கைகளாகவும் உருவாகி நடத்திய சத்திய வேள்வியை யாரும் மறந்திட முடியாது.

தந்தை செல்வா – அண்ணர் அமிர்தலிங்கம் – தேசியத் தலைவர் பிரபாகரன் என மூன்று தலைவர்களோடும் அறப் போராட்டத்திலும் மறப் போராட்டத்திலும் நிறைவானதொரு பங்களிப்பினை வழங்கிய மாவை அண்ணர் பிற்காலத்திலும் தமிழினத்தையும் அதன் ஒற்றுமையையும் பாதுகாத்திட வேண்டுமென கேடயமாய் – போர் வாளாய் தனித்து நின்று போராடிப் பார்த்தார். ஆனால் பதவிக்கும் பட்டத்திற்கும் சந்தர்ப்ப சூழ்நிலை வாதிகளிடம் அவர் தோற்றுப் போனார் என்பதே யதார்த்தம். ஆனாலும் என்ன? ஓயாது தலை சாயாது விடுதலைத் தீ வளர்த்த நெருப்புகளின் வரலாற்றின் அண்ணர் மாவையின் பெயரும் நீக்க மற நிறைந்திருக்கும்.

என் நெஞ்சத்திற்கு நெருக்கமான அண்ணரே! எங்கள் நெஞ்சங்களில் அணையாது எரியும் விடுதலை உணர்வுக்கு வித்திட்டவர்களில் நீங்களும் ஒருவர். உங்களை மறைவை நினைத்து துஞ்சுகின்றேன். விதியே விதியே என் தமிழ்சாதியை என் செயக் கருதுகிறாயோ?

**T.K.பரமேஸ்வரன் -ஈழநாடு**

## கனடா வாழ் கருணையாளர்களே!





என் இனிய உறவுகளே! 13 ஆண்டுகளுக்கு முன் எமது இல்லங்கள் ஆரம் பிக்கப்பட்ட போது இந்தக் குழந்தைகள் போன்றவர்களை வாரி அணைத்து 86 குழந்தைகளோடு ஆரம்பித்து இன்று 423 குழந் தைகளின் அன்பு நிறைந்த இடமாக அன்பு இல்லம். பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இலங்கங்கள் திகழ்கின்றன. மூன்று வேளை உணவு, உடை, உறையுள் மட்டுமன்றி கல்வி மேம்பாடு விளையாட்டு, பரதநாட்டியம் என பல்வேறு துறைகளிலும் எமது இல்லக் குழந்தைகள் முன்னணி வகித்து வருகின்றார்கள்.

அன்பர்களே! அருகே காணப்படும் குழந்தைகள் போல் பலர் இன்றும் ஆலய வீதிகளிலும் கடையோரங்களிலும் நிற்கும் குழந்தைகளைப் பொறுப்பேற்க முன் வருமாறு சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் இருந்து தொடர்ச்சியாகக் கோரிக்கைகள் விட்டப் பட்டு வருகின்றன. ஆனால் எம்மால் பொறுப்பேற்க முடியாதுள்ளமைக்கு எமது இல்லத்தின் நிதி நெருக்கடியே பிரதான காரணமாகும்.

உறவுகளே! உங்கள் கருணையினை இவர்கள் பக்கமும் திருப்புங்கள்! எமது சந்ததியை நாமே காப்பாற்றுவோம்! ஒரு இல்லத்துக் குழந்தைகளுக்கு உணவளிக்க ஒரு நாளுக்கு 200.00 டொலர்கள் மட்டுமே. ஒரு நாள் உணவளிக்க முடியாதோர் ஒரு வேளை உணவுக்கு 100.00 டொலர்கள் தாருங்கள். மேலதிக விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் பார்க்கலாம். ஈழநாடு பத்திரிகையின் அறப்பணி 14 ஆண்டுகளாகத் தொடர்கின்றது.

தொடர்புகளுக்கு பரமேஸ் 416 841 9600

எமது வாழ்நாளில் ஒரு மலையைப் புரட்ட முடியவில்லையே என்ற கவலையை விடுவோம்! ஒரு குழந்தைகளுக்கு உணவளித்தோம் என்று மகிழ்வோடு வாழ்வோம். வாருங்கள்! இணையுங்கள்!

## மகிந்தாவின் 2வது மகனிடம் இருந்த 9 துப்பாக்கிகளில் 7 கைப்பற்றப்பட்டது! 2 ஒப்படைக்கப்படவில்லை!

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஸவிடம் இருந்த ஒன்பது துப்பாக்கிகளில் ஏழு துப்பாக்கிகளை பாதுகாப்பு அமைச்சகம் கையகப்படுத்தியுள்ளதாக பாதுகாப்பு செயலாளர் ஏர்வைஸ் மார்ஷல் (ஓய்வு) சம்பத் துய்யா கோந்தா தெரிவித்துள்ளார் பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் தெரிவித்தார்

மேலும் கருத்து தெரிவித்த பாது காப்பு செயலாளர் தனிநபர்களின் தனிப்பட்ட பாதுகாப்பிற்காக பாதுகாப்பு அமைச்சினால் வழங்க ப்படும் துப்பாக்கிகளில் இருந்து நூற்று எண்பத்தி இரண்டு துப்பாக்கிகள் மட்டுமே பெறப்பட உள்ளதாக அவர் தெரிவித்தார்.



அத்துடன் யோஷித ராஜபக்ஸவிடம் மேலும் இரண்டு துப்பாக்கிகள் இருப்பதாகவும், வேறு எந்த துப்பாக்கியும் இதுவரை ஒப்படைக்கப்படவில்லை என பாதுகாப்பு செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

# புலிகளின் மீள் எழுச்சி குறித்த தகவல்கள் இருந்தால் நீதிமன்றத்தின் ஊடாக நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்துங்கள்- மகிந்தாவிடம் அநுர




மீளப் பெறப்பட்ட தனது பாதுகாப்பு பிரிவை மீள வழங்குமாறு உத்தர விடக் கோரி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் மனு குறித்த வழக்கு நாட்டுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும்.

மீண்டும் விடுதலைப் புலிகளின் ஒன்று கூடல் மற்றும் எழுச்சி தொடர்பான தகவல்கள் அவர் வசம் காணப்படுமாயின் அவற்றை நீதிமன்றத்தின் ஊடாக நாட்டுக்கு வெளிப்படுத்துவது தேசிய பாதுகாப்புக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் 25 ஜனவரி 2025 சனிக்கிழமை இடம் பெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனைக் குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்

பாதுகாப்பினை அதிகரிக்கக் கோரி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் வழக்கு நாட்டில் சிறந்தவொரு வழக்காக அமையும்.

நாட்டின் பாதுகாப்பு சபை கூட அறியாத தமிழீழ விடுதலைப் புலிகளின் மீள் எழுச்சி குறித்த தகவல்கள் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினரிடம் காணப்பட்டால் அவற்றை நீதிமன்றத்தின் ஊடாக நாட்டுக்கு வெளிப்படுத்துவதே சிறந்ததாகும். அவை தேசிய பாதுகாப்புக்கும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக அமையும்.

புலனாய்வு மற்றும் பாதுகாப்பு அறிக்கைகளின் அடிப்படையிலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்பு சபைக்கு அப்பாற்பட்ட தகவல்கள் அவர்களிடம் காணப்பட்டால் அதனை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கமையவே அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 30 534 சதுர அடி மாளிகையிலேயே வசிக்கின்றார். ஒரு ஏக்கரும் 13 பேர்ச் கொண்ட இடமாகும். அது அரசாங்கத்தின் மதிப்பீட்டாளர்களின் மதிப்பீட்டுக்கமைய 3357 மில்லியன் ரூபா பெறுமதியுடையதாகும். விஜேராம மாவத்தையிலுள்ள அந்த இல்லம் 46 இலட்சம் மாதாந்த வாடகை பெறக்கூடியது என்றும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

2021, 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் இந்த இல்லத்தின் மீள்புனரமைப்பு மற்றும் நிர்வாக நடவடிக்கைகளுக்காக மாத்திரம் 472.5 மில்லியன் ரூபா அரச நிதி செலவிடப்பட்டுள்ளது.

2021இல் 252 மில்லியன் ரூபாவும், 2022 இல் 181.5 மில்லியன் ரூபாவும், 2023இல் 38.7 மில்லியன் ரூபாவும் இவ்வாறு செலவிடப்பட்டுள்ளது. இந்த வீட்டில் மொத்த மதிப்பீட்டு பெறுமதியில் இந்த செலவும் சேர்க்கப்பட வேண்டும். தற்போதும் அரசாங்கம் என்ற ரீதியில் பாரியதொரு செலவை அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது. தொடர்ந்தும் இவ்வாறு அநாவசியமாக பாரியதொரு செலவை அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ள முடியாது. இவர்கள் அரசியலமைப்பில் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு இல்லம் வழங்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளதாக மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றனர்.

நாமறிந்த அரசியலமைப்பில் அவ்வாறானதொரு விடயம் குறிப்பிடப்படவில்லை. சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ உள்ளிட்டவர்களிடம் அரசியலமைப்பில் எந்த உறுப்புரையில் அவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது என்று கேட்க விரும்புகின்றோம் என்றார்.

### மகிந்தாவின் 2வது மகன் கைது

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது மகனான யோஷித்த ராஜபக்ஷ குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் 25 ஜனவரி 2025 சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

யோஷித்த ராஜபக்ஷ சட்டவிரோத சொத்து குவிப்பு தொடர்பில் பெலியத்த பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கைது செய்யப்பட்ட யோஷித ராஜபக்ஷ விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவரை புதுக்கடை இலக்கம் 5 மேலதிக நீதவான் பவித்ரா சஞ்சீவனி முன்னிலையில் ஆஜர்படுத்திய போது எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

பணமோசடி சட்டத்தின் கீழ் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது மகனான யோஷித ராஜபக்ஷ, தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் பெலியத்த நுழைவாயிலுக்கு அருகில் கைது செய்யப்பட்டார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தை சேர்ந்த அதிகாரிகள் குழுவால் அவர் கைது செய்யப்பட்டார்.

ரத்மலானை சிறிமல் பிரதேசத்தில் அமைந்துள்ள 34 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள வீடு மற்றும் காணியை வாங்கியது தொடர்பாக யோஷித ராஜபக்ஷவை சந்தேக நபராகப் பெயரிட போதுமான ஆதாரங்கள் இருப்பதாக சட்டமா அதிபரால் கடந்த 23ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அறிவித்ததைத் தொடர்ந்து இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

தற்போது தொடரப்பட்டுள்ள இந்த காணி வழக்கின் பிரதான சந்தேகநபர் யோஷித ராஜபக்ஷவின் பாட்டியான டெய்சி ஃபோரஸ்ட் என்ற பெண் ஆவார்.

# நல்லாட்சிக்கால இடைக்கால அறிக்கை கைவிடப்பட்டுள்ளது? கஜேந்திரகுமாரிடம் தமிழரசின் பதில் தலைவர் சிவஞானம் தெரிவிப்பு!



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நல்லாட்சி காலத்தில் முன்னெடுக்கப்பட்ட புதிய அரசியலமைப்புக்கான இடைக்கால அறிக்கையை கை விட்டுள்ளோம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம், இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் தலைவரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சி.வி.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், புதிய அரசியலமைப்புக்கான கலந்துரையாடலை தமிழ் கட்சிகள் ஒன்று கூடி உரையாடுவதற்கான உத்தியோகபூர்வமான அழைப்பிதழையும் பெற்றுக் கொண்டுள்ள சி.வி.கே.சிவஞானம் விரைவில் அது குறித்த சாதகமான முடிவினை அறிவிக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானத்துக்கும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் எம்.பி மற்றும் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு 25 ஜனவரி 2025 சனிக்கிழமை மாலை நல்லூரில் உள்ள சி.வி.கே.சிவஞானத்தின் இல்லத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின் போது புதிய அரசியலமைப்புக்கான தீர்வு விடயத்தல் பாராளுமன்றத்தில் கூட்டாகச் செயற்படுவது தொடர்பான கலந்துரையாடலை முன்னெடுப்பதற்கும் நாளைய தினம் நடைபெறும் கலந்துரையாடலில் பங்கேற்பதற்கும் இலங்கை தமிழரசுக் கட்சிக்கு உத்தியோக பூர்வமாக எழுத்துமூலமான அழைப்பை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விடுத்துள்ளது.

இந்நிலையில் குறித்த அழைப்பு விடுக்கப்பட்டதன் பின்னர் சி.வி.கே.சிவஞானம் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில், எமது கட்சியைப் பொறுத்தவரையில் புதிய அரசியலமைப்புக்கான முயற்சிகள் புதியவை அல்ல. கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் எமது கட்சியின் பாராளுமன்றக் குழுவின் தலைவர் சிவஞானம் சிறிதரனும் பாராளுமன்றத்தில் சந்தித்துப் பேச்சுவார்த்தையை நடத்தியுள்ளார்கள்.

அந்த விடயம் சம்பந்தமாக மத்திய செயற்குழுவில் உரையாடப்பட்டது. அவர்களது முன்முயற்சிக்கு எதிராக நாங்கள் தீர்மானங்களை எடுக்கவில்லை. மாறாக, எமது கட்சியின் சார்பில் அந்த விடயத்தினை முன்னகர்த்துவதற்காக எழுவர் கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எனக்கும், பொதுச் செயலாளர் சத்தியலிங்கத்துக்கும் எழுத்துமூலமான கடிதமொன்றை வழங்கியுள்ளார்கள். அந்த வகையில் இன்று சத்தியலிங்கம், சிறிதரன், சுமந்திரன் ஆகியோரைச் சந்திப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. ஆகவே அவர்களுன் பேச்சுக்களை நடத்துவதோடு ஏனையவர்களுடனும் பேச்சுக்களை நடத்தி எமது முடிவுகளை அறிவிக்கவுள்ளோம்.

2016-2018வரையிலான காலப்பகுதி ஆட்சியின்போது புதிய அரசியலமைப்புக்காக தயாரிக்கப்பட்ட இடைக்கால அறிக்கை குறித்து நாம் பேச வேண்டிய தேவையில்லை. அது ஏற்கனவே கைவிடப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ஷவின் புதிய அரசியலமைப்புக்கான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தலைமையிலான நிபுணர்கள் குழுவிற்கு எமது கட்சி சமர்ப்பித்த அரசியலமைப்புக்கான வரைவு உள்ளது. அந்த வரைவினையும் இணைத்து, கஜேந்திரகுமாரின் கருத்துக்களையும் இணைத்துக் கொண்டு நாம் சுமூகமானதொரு நிலைப்பாட்டுக்கு வரக்கூடியதாக இருக்கும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

அந்த வகையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அழைப்பினை சாதகமாக பரிசீலிப்பதற்கு எதிர்பார்க்கின்றோம் என்றார்.

# மகிந்தா! பூதங்களைப் போன்று இல்லங்களைப் பிடித்து வைத்துக் கொண்டிருக்காது ஒழுக்கமாக வெளியேறுங்கள்



ஹேமா பிரேமதாசா கோட்டாபய ராஜபக்ஷ ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒரு சட்டமும், சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மைத்திரிபால சிறிசேன மற்றும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு பிறிதொரு சட்டமும் இல்லை. கடிதம் மூலம் அறிவித்தால் தான் அரசாங்கத்துக்கு சொந்தமான இல்லங்களிலிருந்து வெளியேறுவதாகக் குறிப்பிடுவது அவர்கள் வகித்த நிறைவேற்றதிகார ஜனாதிபதி என்ற பதவிக்கு பொறுத்தமானதல்ல என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

28 ஜனவரி 2025 செவ்வாய் கிழமை இடம் பெற்ற வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

முன்னாள் ஜனாதிபதிகள் வசிக்கும் இல்லங்கள் தொடர்பில் அரசாங்கத்தால் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் வெறுமனே ஊடகப் பிரசாரத்துக்கானவை மாத்திரமல்ல. பல்வேறு தகவல்களை நாம் தற்போது முன்வைத்திருக்கின்றோம். அதற்கமைய அந்த இல்லங்களிலிருந்து வெளியேறுமாறு பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் பல சந்தர்ப்பங்களில் நாம் அறிவித்து விட்டோம்.

இதற்கு முன்னர் இந்த இல்லத்தைப் பயன்படுத்திய முன்னாள் ஜனாதிபதியின் பாரியார் ஹேமா பிரேமதாச அதனை ஒப்படைத்து விட்டுச் சென்றார். அதன் பின்னர் கோட்டாபய ராஜபக்ஷவும் அவ்வாறே செயற்பட்டிருந்தார். முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைப் பயன் படுத்தியிருக்கவில்லை. இவர்களும் முன்னாள் ஜனாதிபதிகளே.

அவ்வாறிருக்கையில் அவர்களுக்கொரு சட்டம், இவர்களுக்கொரு சட்டம் இல்லை. மைத்திரிபால சிறிசேனவின் இல்லம் தொடர்பான நீதிமன்ற தீர்ப்பில் உத்தியோகபூர்வ இல்லம் என்றால் என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவை அனைத்தையும் கவனத்தில் கொண்டு அவர்கள் தீர்மானமொன்றை எடுக்க வேண்டும்.

2021இல் அதிகாரம் கிடைத்த பின்னர் ஓய்வு பெற்றதன் பின்னர் வசிப்பதற்காகவென சுமார் 400 மில்லியன் ரூபாவுக்கும் அதிக அரச செலவில் குறித்த இல்லம் புனரமைக்கப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும் தற்போது இந்த இல்லத்தை நிர்வகித்துச் செல்வது அரசாங்கத்துக்கு பெரும் சுமையாகும். எனவே விரைவில் இந்த இல்லத்திலிருந்து மஹிந்த வெளியேறுவார் என்று எதிர்பார்க்கின்றோம்.

கடிதம் அனுப்பினால் தான் வெளியேறுவோம் என்றும் சிலர் கூறிக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் சாதாரண மக்கள் அல்ல. முன்னாள் ஜனாதிபதிகளாவர். எனவே இவர்கள் இவ்வாறு செயற்படுவது அவர்கள் வகித்த பதவிக்கு தகுதியானதல்ல. எனவே தங்களைப் போன்று இல்லங்களைப் பிடித்துக் கொண்டிருக்காமல் ஒழுக்கமாக வெளியேறி விட வேண்டும் என்றார்.

# அரசியலமைப்பில் மாற்றங்களைச் செய்யாமல் முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகளை குறைக்க முடியாது?



முன்னாள் ஜனாதிபதிகளிற்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகளை குறைக்கும் அரசாங்கத்தின் முயற்சிகளிற்கு அரசியலமைப்பின் சில பிரிவுகள் தடையாக உள்ளதாக அரசாங்கம் நியமித்த குழு தெரிவித்துள்ளது என தகவல் வெளியாகியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் வாக்குறுதியளித்தபடி சிக்கன நடவடிக்கைகளை கடைப்பிடிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள ஜனாதிபதி அனுரகுமாரதிசநாயக்க முன்னாள் ஜனாதிபதிகளிற்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகளை குறைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

இது குறித்து ஆராய்வதற்காக அவர் குழுவொன்றை நியமித்திருந்தார்.இது குறித்து ஆராய்ந்த குழுவினர் அரசமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தாமல் முன்னாள் ஜனாதிபதிகளிற்கான சில சலுகைகளை குறைக்க முடியாது என்ற முவிற்கு வந்துள்ளனர்.

அரசமைப்பின் 36 வது பிரிவில் இது குறித்து சில விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளதை அந்த குழுவினர் சுட்டிக்காட்டியுள்ளனர். அரசமைப்பின் இந்த பிரிவுகளை மாற்றுவது பல காரணங்களால் அரசாங்கத்திற்கு சவாலான விடயம் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மேலும் ஜனாதிபதிகளிற்கான உரிமை சட்டத்தின் படி முன்னாள், ஜனாதிபதிகளிற்கு வாடகைகளை வசூலிக்காமல் வீடுகளை வழங்க வேண்டும். இது குறித்து கருத்து தெரிவித்துள்ள பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அரசியலமைப்பின்படி முன்னாள் ஜனாதிபதிகளிற்கான ஓய்வுதியம் போன்ற சில சலுகைகளை உடனடியாக இரத்து செய்ய முடியாது என தெரிவித்துள்ளார்.

எனினும் நாடாளுமன்ற உறுப்பினர்களிற்கான ஓய்✝தியங்களை கட்டுப்படுத்த முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

# சிவமோகன் இடைநிறுத்தத்திற்கு எதிராக இடைக்காலத் தடை விதிக்க நீதிமன்று மறுப்பு!

இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இருந்து தம்மை இடைநிறுத்தி எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு இடைக்காலத் தடை விதிக்கும்



படி கோரி அக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சி.சிவமோகன் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை ஆராய்ந்த யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம் அத்தகைய இடைக் காலத் தடை விதிக்க முடியாது என்று உத்தரவிட்டுள்ளது.

கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சிவமோகனை இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இருந்து இடை நிறுத்தி, அந்நடவடிக்கைகள் தொடர்பாக அவரிடம் இருந்து விளக்கம் கோரும் முடிவைக் கட்சியின் மத்திய குழு அண்மையில் எடுத்திருந்தது. அதற்கு எதிராக கடந்த 22 ஆம் திகதி யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் சிவமோகன் சார்பில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கில் தமக்கு எதிராக கட்சிக்குள் எடுக்கப்பட்டிருந்த இடைநிறுத்த உத்தரவுக்கு எதிராக இடைக்காலத் தடை விதிக்கும்படி சிவமோகன் கோரியிருந்தார்.

சட்டத்தரணி குருபரனினால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில் அவர் முன்னிலையாகி நீதிமன்றத்தில் வாதிட்டிருந்தார். ஒரு தரப்பாக சமர்ப்பிக்கப்பட்ட வாதங்களை செவிமடுத்த நீதிபதி எஸ். சதீஸ்கரன் உத்தரவு வழங்குவதை ஒத்தி வைத்திருந்தார்.

உத்தரவு வழங்கப்பட்டது. அதில் இடைக்காலத் தடை விதிக்க முடியாது என்று நீதிபதி தெரிவித்திருக்கின்றார். வழக்கின் முகப்படியே முகாந்திரத்திலேயே அத்தகைய வழக்குக்கான காரணம் ஏதும் இல்லை என்ற முடிவையும் நீதிபதி தனது உத்தரவில் குறிப்பிட்டிருக்கின்றார். எனினும் எதிராளிகளுக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்ட நீதிபதி வழக்கை பெப்ரவரி 22ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

# சுமந்திரனுக்கு ஏன் இந்தச் சலுகை?



இலங்கை தமிழரசு கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரனுக்கு இரண்டு மெய் பாதுகாவலர்கள் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைத்த பின்னர் செலவினங்களை குறைக்க வேண்டும் என்ற அடிப்படையில் முன்னாள் ஜனாதிபதிகள், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் உட்பட பல பாராளுமன்ற உறுப்பினர்கள் மெய்பாதுகாவலர்களின் பாதுகாப்பை பெற்றுக் கொள்ளவில்லை. இருப்பினும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கு இரண்டு மெய் பாதுகாவலர்கள் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

# நாங்கள் துரத்தும் வரை காத்திருக்காமல் அவரே வெளியேறுவது நல்லது! தமிழ் டயஸ்போராக்களை திருப்திப்படுத்தவே என்னை பழிவாங்குகிறார்கள்



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாம் கூறும் வரை காத்திருக்காமல் உடனடியாக வெளியேறுவதே உசிதமானது. அவருக்கு மாத்திரமின்றி ஏனைய சகல முன்னாள் ஜனாதிபதிகளுக்கும் இது பொறுந்தும் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில், விரைவில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க உள்ளிட்ட சகல முன்னாள் ஜனாதிபதிகளதும் உத்தியோகபூர்வ இல்லங்கள் குறித்த மதிப்பாய்வு முன்னெடுக்கப்படும்.

1986ஆம் ஆண்டு 4ஆம் இலக்க ஜனாதிபதிகளின் உரிமைகள் குறித்த சட்டத்தை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது புதல்வன் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் நன்றாக அறிந்து கொள்ள வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதிக்கு அல்லது அவர் திருமணம் செய்து கொண்டவருக்கு உத்தியோகபூர்வமாக இல்லமொன்று வழங்கப்படாத சந்தர்ப்பத்தில் அவர்கள் வசிக்கும் அரசாங்கத்துக்கு சொந்தமான இல்லத்துக்கு அவர்களுக்கு வழங்கப்படும் ஓய்வுதியத் தொகையில் மூன்றில் ஒரு பங்கினை செலுத்த வேண்டும் என்று குறித்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே நாம் கூறும் வரை காத்திருக்காமல் அவர் வெளியேறத் தான் வேண்டும். அவ்வாறில்லை என்றால் குறித்த இல்லத்துக்கான வாடகையை செலுத்தி அங்கு வசிக்கவும் முடியும். அதனை விட அவருக்கு வளர்ந்த புதல்வர்கள் மூவர் இருப்பதால் அவர்கள் அவரைப் பார்த்துக் கொள்வார்கள் என்று எண்ணுகின்றோம். இந்த சட்டம் மஹிந்த ராஜபக்ஷவுக்கு மாத்திரமின்றி சகல முன்னாள் ஜனாதிபதிகளுக்கும் பொறுந்தும்.

அரசியல்வாதிகளின் சிறப்புரிமைகளை நீக்கி, அவர்களால் மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள சுமையை குறைப்பதற்கான ஆணையே எமக்கு கிடைத்திருக்கின்றது என்றார்.

இதேவேளை உத்தியோகபுர்வ இல்லம் பறிக்கப்படுமென்றும் எனது பாதுகாப்புக்கு நியமிக்கப்பட்ட அதிகாரிகள் நீக்கப்படுவார்களென்றும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கூறியது, தேர்தலில் அவர்களுக்கு உதவிய தமிழ் புலம்பெயர்ந் தோரின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதாகும் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஊடகமொன்றிடம் தெரிவித்துள்ளார்.

இன்று பலர் கடந்த காலத்தை மறந்துவிட்டதாகக் கூறிய ராஜபக்ஷ தனது உத்தரவின் பேரில் செயல்பட்டு, விடுதலைப் புலிகள் நாட்டிற்கு ஏற்படுத்த முயன்ற பெரும் அழிவைத் தடுத்தவர்கள் முப்படைகளின் வீரமிக்க வீரர்கள் என்றும் கூறினார்.

மத்திய வங்கி குண்டு, தெஹிவளை ரயில் குண்டு, எயார் லங்கா குண்டு வெடிப்பு, மற்றும் கொழும்பு மீது விமானங்கள் மூலம் குண்டுவீச்சு. அந்த நேரத்தில் ஒவ்வொரு வாரமும் கிராமங்களுக்கு வீரர்களின் உடல்கள் அடங்கிய சீல் வைக்கப்பட்ட சவப் பெட்டிகள் எத்தனை வந்தன என்பதை ராஜபக்ஷ ஊடகமொன்றிடம் நினைவு கூர்ந்தார். மேலும் முன்னாள் இந்தியத் தலைவர் ராஜீவ்காந்தி மற்றும் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச, அரசியல்வாதிகள் உட்பட ஆயிரக்கணக்கான அப்பாவி பொதுமக்கள் கொல்லப்படுவதைத் தடுத்தது தனது அரசாங்கம்தான் என்றும் மஹிந்த சுட்டிக்காட்டினார்.

நாட்டின் மிகவும் அச்சுறுத்தலை எதிர்கொண்ட அரச தலைவரின் உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் பாதுகாப்பை இழந்ததற்கு பொதுமக்களின் எதிர்வினையை வரவிருக்கும் தேர்தல்களில் அரசாங்கம் அறிய முடியும் என்றும் கூறியுள்ள மஹிந்த ராஜபக்ஷ பாதுகாப்பு அல்லது உத்தியோகபூர்வ இல்லம் குறித்து ஒருபோதும் புகார் செய்ய மாட்டேன் என்றும் தெரிவித்துள்ளார்.

# இந்திய மீனவர்கள் மீதான கடற்படையின் துப்பாக்கிச்சூடு தூதுவரை வரவழைத்து கடும் கண்டனம் தெரிவித்த இந்தியா



28 ஜனவரி 2025 செவ்வாய்கிழமை அதிகாலை 13 இந்திய மீனவர்கள் சம்பந்தப்பட்ட இலங்கை கடற்படையின் துப்பாக்கிச் சூடு சம்பவத்திற்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

நெடுந்தீவுக்கு அருகேயுள்ள கடற்பரப்பில் செவ்வாய் அதிகாலை இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் அவர்களை கைது செய்ய முயன்ற போது இலங்கை கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இந்தப் துப்பாக்கிச் சூட்டில் குறைந்தது இரண்டு மீனவர்கள் பலத்த காயம் அடைந்தனர். காயமடைந்த மீனவர்கள் தற்சமயம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலும் மூன்று மீனவர்களும் சிறு காயங்களுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்று வருவதாக இந்திய வெளிவிவகார அமைச்சு ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரக அதிகாரிகள் காயமடைந்த மீனவர்களை வைத்தியசாலையில் சென்று பார்வையிட்டு நலம் விசாரித்துள்ளனர். மேலும், மீனவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் சாத்தியமான அனைத்து உதவிகளையும் செய்து வருகின்றர் என்றும் அமைச்சு அந்த அறிக்கையில் குறிப்பட்டுள்ளது.

இந்த நிலையில், துப்பாக்கிச்சூடு சம்பவத்திற்கு பதிலளிக்கும் விதமாக, இந்திய வெளிவிவகார அமைச்சர் புதுடெல்லியில் உள்ள இலங்கையின் தற்காலிக உயர்ஸ்தானிகரை வரவழைத்து, சம்பவம் குறித்து கடும் கண்டனத்தை பதிவு செய்தார்.

கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் இந்த விடயத்தை இலங்கை அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சிடமும் எழுப்பியுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாழ்வாதாரக் கவலைகளை மனதில் கொண்டு, மீனவர்கள் தொடர்பான பிரச்னைகளை மனிதாபிமானமாக கையாள வேண்டியதன் அவசியத்தை இந்திய அரசு எப்போதும் வலியுறுத்தி வருகிறது.

எந்தச் சூழ்நிலையிலும் பலத்தை பயன்படுத்துவதை ஏற்க முடியாது. இது தொடர்பாக இரு அரசாங்கங்களுக்கும் இடையே இருக்கும் புரிந்துணர்வுகள் கண்டிப்பாக கடைப் பிடிக்கப்பட வேண்டும் என்றும் இந்திய அதிகாரத் தரப்பு வலியுறுத்தியது.

# மகிந்தாவுக்கு வசிப்பதற்கு வீடில்லை என்றால் வீடொன்றை வழங்க அரசு தயார் - ஜனாதிபதி தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி மகிந்தராஜபக்ச வசிப்பதற்கு வீடு இல்லை என்றால் அவருக்கு வீடொன்றை வழங்குவதற்கு அரசாங்கம் யார் என ஜனாதிபதி அனுர குமாரதிசநாயக்க தெரிவித்துள்ளார்.

தம்புத்தேகமவில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் இதனை தெரிவித்துள்ள ஜனாதிபதி நானும் அமைச்சர்களும் மாளிகைகளில் வசிக்க ஆரம்பிக்கவில்லை முன்னாள் ஜனாதிபதியால் ஏன் அதனை செய்ய முடியாது என கேள்வி எழுப்பியுள்ளார்.

பொதுமக்களின் வரிப் பணத்தில் மாளிகைகளில் வசிப்பது நியாயமான விடயம் இல்லை, நாங்கள் எவரையும் பழி வாங்கவில்லை என தெரிவித்துள்ள ஜனாதிபதி நாங்கள் நாட்டை புதிய திசையில் இட்டுச் செல்கின்றோம், வெளியேறுங்கள் என நாங்கள் வேண்டுகோள் விடுப்பதற்கு முன்னர் அவர்கள் வெளியேறவேண்டும் என தெரிவித்துள்ளார்.



மாறுங்கள் என நாங்கள் அவர்களை கேட்டுகின்றோம் மக்களின் வரிப்பணத்தை செலவிடுவதற்கு முன்னர் இரண்டு தடவை யோசிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறழருக்க முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது மகனான யோஷித்த ராஜபக்ஷவை பிணையில் விடுதலை செய்ய கொழும்பு நீதவான் நீதிமன்றம் 27 ஜனவரி 2025 திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளது. யோஷித்த ராஜபக்ஷ 50 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு சரீர பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

34 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான காணி ஒன்றை (22ம் பக்கம் பார்க்க)

# NPP அரசாங்கம் ஏன் மக்களிடம் வேகமாக தோல்வியடைந்து வருகிறது?

பல முக்கிய மற்றும் பல இரண்டாம் நிலை காரணிகள் அவற்றின் தோல்விக்கு பங்களிப்புச் செய்தன. அதில் முக்கிய விஷயம் என்னவென்றால், முந்தைய அரசாங்கங்களை விமர்சிப்பதைத் தவிர, தங்களது அரசாங்கத்தை நடத்துவதற்கு NPP அணியினரிடம் எந்த ஏற்பாடுகளோ அல்லது திட்டமோ இருக்கவில்லை.

குறைந்த பட்சம் அனுர ஜனாதிபதியான பிறகு காலியாக இருந்த நாடாளுமன்ற ஆசனத்திற்கு கூட ஒருவரை நியமிக்க அவர்களால் முடியவில்லை. இதற்குக் காரணம் நாடாளுமன்றம் திடீரெனக் கலைக்கப்பட்டதே ஆகும். இன்னுமொரு முக்கிய விஷயம் அவர்களின் அனுபவமின்மை. அமைச்சர்களின் செயலாளர்கள் நியமிக்கப்பட்ட தருணத்திலிருந்தே இது தெளிவாகத் தெரிந்தது.

நாட்டின் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையான படிநிலையை மதிக்காமல், தங்களுக்கு தேர்தல் காலத்தில் உதவியவர்களும் கூட்டாளிகளுமே அவ்வாறான பதவிகளுக்கு நியமிக்கப்பட்டனர். அவர்களின் தோல்விக்கு மற்றுமொரு காரணம், பாரம்பரிய அரசாங்கங்களைப் போலவே, அரசாங்கம் அமைக்கப்பட்டவுடன், பாரம்பரிய அரசியலிலிருந்து பொதுமக்களை திசை திருப்ப முட்டாள்தனமான ஊடக நிகழ்ச்சிகளை நடத்தியதும், மக்களிடம் அறிக்கை விட்டதும், எதிர்க் கட்சியினரை விமர்சிக்க பயன்படுத்திய ஒவ்வொரு கருத்தும் கடைசியில் இவர்களுக்கே பேரழிவாக அமைந்தது.

அவர்களின் கடந்த கால அறிக்கைகளும் தற்போதைய நடவடிக்கைகளும் முற்றிலும் முரண்பாடாக இருக்கின்றன. அவர்கள் சொன்னதொன்று செய்வதொன்று. அவர்களுக்கு வாக்களித்த அனைவருக்கும், அவர்களுக்கு வாக்களிக்காதவர்களுக்கும் அவர்கள் அதிகாரத்தைப் பெறுவதற்காக `பொய்களைப்' பயன் படுத்தினர் என்பது தெளிவாக தெரிந்து விட்டது.

ஆனால் அவர்களுக்கு வாக்களித்தவர்கள், அவர்கள் அதிகாரத்திற்கு வந்தவுடன் பொய்களிலிருந்து விலகி விடுவார்கள் என்று நம்பினாலும், அவர்கள் பொய்களிலிருந்து தங்களைத் தூர விலக்கிக் கொள்ளவில்லை. அதையே மீண்டும் நியாயப்படுத்த முயற்சித்து மூக்குடைந்திருக்கிறார்கள். கடைசியாக அவர்களுக்கு வாக்களித்தவர்களையே சமூகத்தின் முன் வெட்கப்பட வைத்திருக்கிறார்கள் என்பதும் ஒரு குறிப்பிடத்தக்க விஷயம்.

போலி பேராசிரியர்கள், மருத்துவர்கள் மற்றும் பட்டதாரிகள் வெளிப்படையாக மக்களால் தோலுரிக்கப்பட்டார்கள். அரசாங்கத்திடம் அதனை மறைக்க போதுமான எந்த ஆதாரங்களும் இல்லை. புதிய அரசாங்கம் அமைந்து ஒரு மாதத்திற்குள், இந்த நாட்டு மக்கள் ஒரு கல்லைக் கூட கையில் எடுக்காமல் சபாநாயகரை பதவியிலிருந்து வெளியேற்றினர். அதுவொரு உச்ச பட்ச தோல்வி. மேலும், பாராளுமன்றத்தை சுத்தம் செய்வதாக கூறி பெரும் ஷோ காட்டி பாராளுமன்றத்திற்கு அனுப்பிய புதியவர்களும் படித்தவர்களும் மக்கள் எதிர்பார்த்தது போல் செயற்படவில்லை.

குறிப்பாக அவர்களின் Canteen விடயங்கள் கூட எதிர்க்கட்சிகளுக்கு விவாதப் பொருளாக மாறின. ஜனாதிபதியின் இந்திய பயணத்தின் போது, ஒரு நாட்டின் தலைவராக அவரது ஆளுமை கேள்விக்குள்ளாக்கப்பட்டது. முன்னாள் ஜனாதிபதி சிறிசேனவைப் போலவே அவரும் மக்களின் தூதுவராக மாறினார் தவிர அவரின் ஆளுமை அங்கும் மழுங்கடிக்கப்பட்டது. அரசாங்கம் எதனை முன்னுரிமை கொண்டு செய்ய வேண்டும், எது நாட்டுக்கு இப்போது அவசியமானது என்ற பட்டியலை உண்மையில் அவர்கள் இன்னும் அடையாளம் காணவில்லை. அதனால் தான் அவர்கள் காலம் கடத்துவதற்காக Clean Srilanka என்ற பெயரில் பேருந்துகளையும் முச்சக்கர வண்டிகளையும் சுத்தம் செய்யச் சென்று மக்களின் அதிருப்திக்குச் ஆளாகியுள்ளனர்.

மக்களின் அடிப்படைத் தேவையான உணவுக்கு தேவையான அரிசி விடயத்தில் அவர்கள் காட்டிய அலட்சியப் போக்கும், டட்லியின் அரிசி மாஃபியாவுக்கு அவர்கள் தொடர்ந்து அடிபணிவதும் அவர்களின் தோல்விக்கு மற்றொரு முக்கிய காரணமாகும்.

ஜனாதிபதி டட்லியுடன் மேசையில் அடித்துப் பேசியதாக கூறிய விடயத்தைக் கூட மக்கள் ஏளனமாக பார்க்க வேண்டி நேர்ந்து விட்டது. ஒரு மதகு கூட கட்டாமல், நாட்டின் வளர்ச்சிக்கு எந்தப் பங்களிப்பையும் செய்யாத அரசாங்க அமைச்சர்களின் ஆணவம் கொண்ட நடத்தை மற்றும் பேச்சு இப்போது நாட்டு மக்களினால் அதிகம் வெறுக்கப்படுகிறது என்பதும் உண்மை.

இப்போது சில நேரங்களில் ஊடகங்களைக் கண்டால் அமைச்சர்கள் ஓடி விடும் சம்பவங்களும் அரங்கேறுகிறது.

பாராளுமன்றத்திற்கு மிகுந்த பெருமையுடன் சென்ற படித்தவர்கள், பட்டதாரிகள், கலாநிதிகள் போன்றோர் இன்று எட்டாம் வகுப்புக்கும் செல்லாத எதிர்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் முன் வாயடைத்துப் போனார்கள். இவை அனைத்தின் விளைவாக, தூங்கிக் கிடந்த எதிர்க்கட்சியினர் இன்று விழித்துக் கொண்டனர். ஜனாதிபதியும் அரசாங்கமும் பதவியேற்று மூன்று மாதங்களுக்குள், சமூக ஊடகங்களின் அதிகாரத்தை எதிர்க்கட்சிகள் கைப்பற்றி இருக்கின்றன. அதே நேரத்தில் ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் நியமிக்க அதிகாரம் அளித்த பல வாக்காளர்களும், ஆதரவாளர்களும் இன்று மௌனித்து விட்டனர். ஒரு சில வெட்கமற்ற மனிதர்களைத் தவிர, ஒவ்வொரு அரச நிறுவனமும் அதன் செயற்பாடுகளும் இன்று வினைத்திறன் அற்றுப் போய் காணப்படுகிறது.



புதிதாக நியமிக்கப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப அறிவு அல்லது நடைமுறை அனுபவம் இல்லை என்பதும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை துறைமுகத்திலிருந்து வெளியேற்றும் செயல்முறையே அதற்கு சிறந்த உதாரணம். பல வாரங்களாக கன்டெய்னர் லாரிகள் பெரும் வரிசையில் வீதிகளில் நிற்கின்றன. இதற்கு முக்கிய காரணம் துறைமுகத்தின் புதிய அரசு மேற்கொண்ட ஒழுங்கற்ற நியமனங்கள் ஆகும்.

மூன்று வாரங்களுக்குள், துறைமுகத்திற்கு வந்த 30 கப்பல்கள் திரும்பிச் சென்றுள்ளன. இதன் காரணமாக நாட்டின் சுங்கம் வரலாற்றில் மிகப்பெரிய நட்டத்தைச் சந்தித்து வருகிறது. சுமார் 30 கப்பல்கள் திருப்பி அனுப்பப்பட்ட பின்னரே ஜனாதிபதி இது தொடர்பில் கூட்டம் நடாத்துகிறார். அரசாங்கத்தின் செயல்திறனை விளக்குவதற்கு இதை விட உதாரணங்கள் தேவையில்லை.

இந்த அரசாங்கம் ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதார திட்டத்தின் விரிவாக்கமே தவிர வேறொன்றுமில்லை. இந்த அரசாங்கத்தின் பலவீனம் மக்களின் மனதில் அல்ல, மாறாக அவர்களின் இதயங்களில் மிகவும் தீவிரமாக உணரப்பட்டுள்ளது. ஜனவரி முதலாம் தேதி, அரிசி கொழு க்கட்டை சமைக்க பச்சரிசி இல்லை. தைப் பொங்கலைக் கொண்டாட, பொங்கல் பால் சாதம் செய்ய சிவப்பு அரிசி இல்லை. இவை மிகவும் உணர்வுபூர்வமான விஷயங்கள். இதில் ஆகவும் முக்கியமான விடயம் என்னவென்றால் இவ்வாறான அனைத்து தோல்விகளுக்கும் காரணம் அவர்களின் அனுபவமற்ற தண்மையே தவிர எதிர்க்கட்சிகள் இதுவரைக்கும் அரசுக்கு எதிராக எதுவும் செய்யவில்லை என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

# அகதிகள் விவகாரத்தில் ஆட்டத்தை ஆரம்பித்தார் ட்ரம்ப்! அதிரடி காட்டிய கொலம்பியா ஜனாதிபதி அடி பணிந்தார்!



அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள டொனால்ட் ட்ரம்ப், தொடக்கம் முதலே அதிரடி காட்டி வருகிறார். பல்வேறு திட்டங்களை ரத்து செய்யும், புதிய பணிகளை மேற்கொள்ளவும் அவர் உத்தரவுகளில் கையெழுத்திட்டுள்ளார். அதில், அமெரிக்காவின் குடியேற்றக் கொள்கையும் ஒன்று. அதாவது, அமெரிக்காவில் சட்டவிரோதமாக நுழைவதைத் தடுக்கும் வகையில் உத்தரவிட்டுள்ளார்.

இந்த நிலையில், சட்டவிரோதமாக அங்கு குடியேறியவர்கள் கைது செய்யப்பட்டு, நூற்றுக்கணக்கான ராணுவ விமானங்கள் மூலம் நாடு கடத்தப்பட்டு வருகின்றனர். அந்த வகையில், அமெரிக்காவில் சட்ட விரோதமாகக் குடியேறியிருந்த கொலம்பியர்களை கொலம்பியாவுக்கு நாடு கடத்த ட்ரம்ப் உத்தரவிட்டார்.

இதனைத் தொடர்ந்து, நாடு கடத்தப்பட்ட குடியேறிகளை ஏற்றிவந்த இரு விமானங்களை கொலம்பியாவில் தரையிறக்க அந்நாட்டு அதிபர் அனுமதி அளிக்கவில்லை. "குடியேறிய மக்களை பொது விமானங்கள் மூலம் மட்டுமே அனுப்ப வேண்டும் என்றும் ராணுவ விமானங்களில் அனுப்ப அவர்கள் குற்றவாளிகள் இல்லை" என்றும் அதிபர் குஸ்டாவோ ஃபெட்ரோ தெரிவித்திருந்தார்.

இதன் காரணமாகக் கோபமடைந்த அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கொலம்பிய இறக்குமதிகள் மீதான 25வீத வரியை அதிகரித்து பழிவாங்கும் நடவடிக்கையில் இறங்கினார். பதிலுக்கு கொலம்பியாவும் அமெரிக்கப் பொருட்களுக்கு 25வீத ஏற்றுமதி வரி உயர்வை அறிவித்தது.

உடனே மீண்டும் ட்ரம்ப், கொலம்பிய பொருட்களுக்கான சுங்க ஆய்வுகளை மேம்படுத்துதல், அந்நாட்டு அதிகாரிகள் மீதான விசா கட்டுப்பாடுகளை அறிவித்தார். இதனால் அடிபணிந்த கொலம்பியா, நாடு கடத்தப்பட்ட குடியேறிகளை எந்தவித நிபந்தனையும் இல்லாமல் ஏற்றுக் கொள்ள ஒப்புக் கொண்டது. இதையடுத்து, கொலம்பியா மீதான 25வீத வரி விதிப்பை அமெரிக்கா திரும்பப் பெற்றுக் கொண்டது என வெள்ளை மாளிகை அறிக்கை வெளியிட்டுள்ளது.

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! பெப்ரவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் – உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை – நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் – மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக – எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை – மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக. "தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

17 ஜனவரி 2025– 24 ஜனவரி 2025 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திருமதி வி.எம்.தம்பிஐயா மகேஸ்வரி

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி வி.எம்.தம்பிஐயா மகேஸ்வரி அவர்களின் 31ம்நாள் நினைவு நாள் 22 ஜனவரி 2025 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி வி.எம்.தம்பிஐயா மகேஸ்வரி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 11வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு ஆறுமுகம் செல்லத்துரை

புங்குடுதீவு 6ம்வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்த யாழ்.மத்திய கபே உரிமையாளர் அமரர் திரு ஆறுமுகம் செல்லத்துரை அவர்களது 11வது ஆண்டு நினைவு நாள் 23 ஜனவரி 2025 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு ஆறுமுகம் செல்லத்துரை அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 17வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தங்கராணி சடாச்சரசுந்தரம்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தங்கராணி சடாச்சரசுந்தரம் அவர்களது 17வது ஆண்டு நாள் நினைவு நாள் 29 ஜனவரி 2025 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தங்கராணி சடாச்சரசுந்தரம் அவர்களை நினைவுகூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நல்லையா மகேந்திரன்

பிரான்பற்று பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு நல்லையா மகேந்திரன் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாள் 26 ஜனவரி 2025 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு நல்லையா மகேந்திரன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி அப்புத்துரை சின்னம்மா

தைபிட்டியைப் பிறப்பிடமாகவும் ஏழாலை வடக்கை வதிவிடமாகவும் மானிப்பாயை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி அப்புத்துரை சின்னம்மா அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் 20 ஜனவரி 2025 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் 25 ஜனவரி 2025 சனிக்கிழமை அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி அப்புத்துரை சின்னம்மா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சுபேந்திரன் (ஸ்ரீ) முத்தையா

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடா மொன்றியல், ரொறன்ரோ ஆகிய இடங்களை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சுபேந்திரன் முத்தையா (ஸ்ரீ) அவர்களின் நான்காவது ஆண்டு நினைவு நாள் 26 ஜனவரி 2025 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சுபேந்திரன் முத்தையா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கந்தையா கணேசமூர்த்தி

நாவலி மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கந்தையா கணேசமூர்த்தி அவர்களின் முதலாவது ஆண்டு நினைவு நாள் 02 பெப்ரவரி 2025 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு கந்தையா கணேசமூர்த்தி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




15 ஜனவரி 2025 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பாலமுரளி மதிவதனி தம்பதிகளின் செல்வப்புதல்வி வருணிகா பாலமுரளியின் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி வருணிகா பாலமுரளி அவர்கள் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




19 ஜனவரி 2025 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ராமதாசன் விஜயரீ இணையர்களின் 28வது திருமண நன்நாளாகும். அன்றைய தினம் இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




20 ஜனவரி 2025 திங்கட்கிழமை கனடா Exevitive woodwork Ltd ஊழியர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




23 ஜனவரி 2025 வியாழக்கிழமை புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு ஆறுமுகம் செல்லத்துரை அவர்களது 11வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




22 ஜனவரி 2025 புதன்கிழமை புங்குடுதீவு 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி V.M. தம்பிஜயா மகேஸ்வரி அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




23 ஜனவரி 2025 வியாழக்கிழமை காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சிவநேசன் துரைச்சாமி அவர்களது 41வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




25 ஜனவரி 2025 சனிக்கிழமை தையிட்டியைப் பிறப்பிடமாகவும் ஏழாலை வடக்கை வதிவிடமாகவும் மானிப்பாயை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி அப்புத்துரை சின்னம்மா அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




25 ஜனவரி 2025 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு சிதம்பரப்பிள்ளை மகாதேவா அவர்களதும் செல்வன் ராகுல் குமரகுரு அவர்களதும் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் இருவரும் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




26 ஜனவரி 2025 ஞாயிற்றுக்கிழமை பிரான்பற்று பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நல்லையா மகேந்திரன் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




26 ஜனவரி 2025 ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடா மொன்றியல், ரொறன்ரோவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சுபேந்திரன் முத்தையா (ஸ்ரீ) அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாகஅன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




27 ஜனவரி 2025 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி வசந்தகுமார் ராஜவினோதா தம்பதிகளின் செல்வப்புதல்வன் சஞ்சயம் வசந்தகுமாரின் 24வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் சஞ்சயன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




29 ஜனவரி 2025 புதன்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தங்கராணி சடாச்சரசுந்தரம் அவர்களது 17வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




31 ஜனவரி 2025 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ஸ்ரீதரன் மகேந்திரம் திருமதி சுதா மகேந்திரராஜா தம்பதிகளின் செல்வப்புதல்வன் அஸ்வின் ஸ்ரீதரனின் 20வது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வன் அஸ்வின் தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




31 ஜனவரி 2025 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ஸ்ரீதரன் மகேந்திரம் திருமதி சுதா மகேந்திரராஜா தம்பதிகளின் செல்வப்புதல்வன் அஸ்வின் ஸ்ரீதரனின் 20வது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வன் அஸ்வின் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




31 ஜனவரி 2025 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ஸ்ரீதரன் மகேந்திரம் திருமதி சுதா மகேந்திரராஜா தம்பதிகளின் செல்வப்புதல்வன் அஸ்வின் ஸ்ரீதரனின் 20வது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வன் அஸ்வின் தனது பெற்றோர்களுடன் இணைந்து செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்

# டீப்சீக்:- செயற்கை நுண்ணறிவு உலகில் அமெரிக்க ஆதிக்கத்திற்கு "செக்"வைத்த சீன செயலி



அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் சீனாவில் ஆப்பிள் ஆப் ஸ்டோரில் ChatGPT உள்ளிட்ட செயலிகளை சீன செயற்கை நுண்ணறிவு செயலியான டீப்சீக் (DeepSeek) பின்னுக்கு தள்ளியுள்ளது. அதிகம் வரவேற்பை பெற்ற இலவச செயற்கை நுண்ணறிவு (AI) செயலியாக மக்கள் மத்தியில் பிரபலம் அடைந்துள்ளது.

சீன செயலிக்கு அதிகரிக்கும் வரவேற்பு, செயற்கை நுண்ணறிவு தொடர்புடைய அமெரிக்க நிறுவனங்களின் பங்குகள் விற்பனையை தூண்டியிருக்கிறது. இதனால் என்விடியா, மைக்ரோசாப்ட் மற்றும் மெட்டா ஆகிய பெரு நிறுவனங்களின் பங்குகள் கடந்த 27 ஜனவரி 2025 திங்கட்கிழமை வீழ்ச்சியடைந்தன. இது ஐரோப்பிய பங்குச்சந்தைகளிலும் எதிரொலித்தது.

செயற்கை நுண்ணறிவுத் துறையில் அமெரிக்காவை விஞ்ச முடியாது என்ற பரவலான நம்பிக்கைக்கு சவால் விடும் வகையில், அறிமுகமான முதல் நாளில் இருந்தே இச்செயலி பிரபலமடைந்து வருகிறது. இதனால் அமெரிக்க நிறுவனங்கள் இந்தத் துறையில் செய்ய திட்டமிட்டிருக்கும் முதலீடுகளின் அளவு குறித்து கேள்விகளையும் எழுப்பியுள்ளது.

## மலிவு விலை ஏ.ஐ சாத்தியமானது எப்படி?

இது ஓபன் சோர்ஸ் டீப்சீக்-வி3 மாடலால் செயல்படுகிறது. இதை உருவாக்க 6 மில்லியன் டாலர்களை விட குறைவான தொகையே செலவானதாக அதன் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இந்தத் தொகை அதன் போட்டியாளர்கள் செலவிட்ட பல பில்லியன் டாலர்களைவிட கணிசமான அளவு குறைவு. ஆனால் இந்த கூற்றை இத்துறையில் இருக்கும் மற்றவர்கள் மறுக்கிறார்கள்.

செயற்கை நுண்ணறிவிற்கு தேவையான உயரிய சிப் தொழில் நுட்பத்தை சீனாவிற்கு விற்பனை செய்வதற்கு அமெரிக்கா கட்டுப்பாடுகளை விதித்துவரும் சூழலில் தான் டீப்சீக்சின் எழுச்சி ஏற்பட்டுள்ளது.


உயரிய தொழில்நுட்பத்துடனான இறக்குமதி செய்யப்பட்ட சிப்கள் சீராக கிடைக்காத நிலையில், சீன செயற்கை நுண்ணறிவு வல்லுநர்கள் தங்களது பணியை ஒருவருக்கு ஒருவர் பகிர்ந்து கொண்டதுடன், அந்த தொழில்நுட்பம் தொடர்பான புதிய அணுகுமுறைகளையும் முயற்சித்திருக்கின்றனர். இதனால் முன்பை விட குறைவான அளவே கணினி ஆற்றல் தேவைப்படும் செயற்கை நுண்ணறிவு மாடல்கள் உருவாகியுள்ளன. இதற்கு முன்பு நினைத்ததை விட குறைவாகவே செலவாகும் என்பதால் இந்த துறை மேம்பட வாய்ப்புகள் உள்ளன.

முன்னதாக இம்மாதத்தில் டீப்சீக்-ஆர் 1 அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், கணிதம், கோடிங் மற்றும் மொழி பகுத்தறிதல் போன்றவற்றில் இதன் செயல்பாடு சாட்ஜிபிடி தயாரிப்பாளரான ஓபன்ஏஐ உருவாக்கிய மாடல்களுக்கு இணையாக இருப்பதாக அந்த நிறுவனம் பெருமிதத்துடன் தெரிவித்தது.

## முதலீடுகள் பாதிப்படையக் கூடும்

சிலிகான் பள்ளத்தாக்கு முதலீட்டாளரும், டொனால்ட் டிரம்பின் ஆலோசகருமான மார்க் ஆண்டர்சன், டீப்சீக்-ஆர்1 -சோவியத் யூ னியன் 1957இல் செயற்கைக்கோள் ஏவியதை போன்றது என்று சுட்டிக்காட்டும் வகையில் 'ஏ.ஐ. துறையின் ஸ்புட்னிக் தருணம்' என விவரித்தார் .அந்த காலகட்டத்தில், அமெரிக்கா எதிராளியின் தொழில்நுட்ப சாதனை குறித்து அறியாமல் இருந்ததாக கருதப்பட்டது.

டீப்சீக் செயலிக்கு மக்களிடையே கிடைத்துள்ள வரவேற்பு பங்குச் சந்தைகளை திடுக்கிடச் செய்துள்ளது. சிப் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள நெதர்லாந்தை சேர்ந்த ஏஎஸ்எம்எல் நிறுவனத்தின் பங்குகள்




10வீதத்துக்கு மேல் சரிவடைந்தன. ஏ.ஐ தொடர்பான பொருட்களை தயாரிக்கும் சீமென்ஸ் எனர்ஜி நிறுவனத்தின் பங்குகளின் மதிப்பு 21வீதம் குறைந்தது.

ஒரு குறைந்தவிலை சீனத் தயாரிப்பு என்ற எதிர்பார்ப்பு இல்லாததால், இது சந்தைகளை சற்றே ஆச்சரியமடைய வைத்துள்ளது,' என்றார் சிட்டி இண்டெக்ஸில் மூத்த சந்தை ஆய்வாளரான ஃபியோனா சின்கோட்டா.

திடீரென இந்த குறைந்த விலை ஏ.ஐ மாடல் கிடைத்ததால், விலை உயர்ந்த ஏ.ஐ கட்டமைப்புகளில் முதலீடு செய்துள்ள அதன் போட்டி நிறுவனங்களின் லாபம் குறித்த கேள்விகளை எழுப்பப் போகிறது.'இது 'ஏ.ஐ தொழில்நுட்ப விநியோக சங்கிலியில் செய்யப்படும் முதலீடுகளை தடம்புரள செய்யக்கூடும்' என சிங்கப்பூரைச் சேர்ந்த தொழில்நுட்ப பங்குகள் ஆலோசகர் வே-செர்ன் லிங் பிபிசியிடம் தெரிவித்தார்.

ஓபன்ஏஐ போன்ற அமெரிக்க நிறுவனங்களின் ஆதிக்கத்திற்கு டீப்சீக் சவாலாக இருந்தாலும், சீன நிறுவனங்கள் சந்தித்து வரும் பிரச்சனைகள் அவற்றின் வளர்ச்சியை தடுக்கக் கூடும் என பெரு வங்கியான சிட்டி பேங்க் எச்சரித்துள்ளது.

தவிர்க்க முடியாத கூடுதல் கட்டுப்பாடுகள் நிறைந்த சூழலில், உயரிய தொழில்நுட்பம் கொண்ட சிப்கள் அதிக அளவில் கிடைப்பது அமெரிக்காவிற்கு ஒரு சாதகம், என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

டெக்ஸாஸில் செயற்கை நுண்ணறிவு கட்டமைப்பிற்காக 500 பில்லியன் டாலர்களை முதலீடு செய்யும் ஸ்டார்கேட் புராஜெக்ட் என்ற நிறுவனத்தை தொடங்குவதாக அமெரிக்க தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை கொண்ட கூட்டமைப்பு கடந்த வாரம் அறிவித்தது.

## டீப்சீக்கை உருவாக்கியது யார்?

இந்த நிறுவனம் தென்கிழக்கு சீனாவின் ஹேங்ஜீ நகரில் லியாங் வென்ஃபெங் என்பவரால் 2023-ல் தொடங்கப்பட்டது. 40 வயதான இவர், தகவல் மற்றும் மின்னணு பொறியியல் பட்டதாரி என்பதுடன் டீப்சீக்கை ஆதரித்த 'ஹெட்ஜ்' நிதியை உருவாக்கியவரும் இவர் தான்.

இவர் தற்போது சீனாவுக்கு ஏற்றுமதி செய்யக் கூடாது தடை விதிக்கப்பட்டுள்ள என்விடா ஏ100 சிப்களை வாங்கிச் சேர்த்திருப்பதாக கூறப்படுகிறது. இது சுமார் 50,000 சிப்கள் என கணிக்கப்படுகிறது. இந்த சேகரிக்கப்பட்ட சிப்புகளை, மலிவு விலையில் இறக்குமதி செய்யக்கூடிய சிப்புகளுடன் இணைத்து , டீப்சீக்கை இவர் உருவாக்கியிருக்கலாம் என்று நிபுணர்கள் நம்புகின்றனர். அண்மையில் தொழில்துறை நிபுணர்களுடன் சீன பிரதமர் நடத்திய சந்திப்பில் லியாங்கும் காணப்பட்டார்.

2024, ஜீலையில் சீன அகாடமிக்கு அளித்த பேட்டியில் தனது முந்தைய VI மாடலுக்கு கிடைத்த வரவேற்பை கண்டு ஆச்சரியமடைந்ததாக கூறினார். கட்டணம் இவ்வளவு முக்கியமான விஷயமாக இருக்கும் என்று நாங்கள் கருதவில்லை,' என அவர் தெரிவித்தார்.

'நாங்கள் எங்களுடைய வேகத்தில் செயல்பட்டு, செலவுகளை கணக்கிட்டு, அதன் அடிப்படையில் கட்டணங்களை நிர்ணயித்தோம்.' என்றார் அவர்.

நன்றி:- பிபிசி

## 24வது இனிய பிறந்த நன்நாள் வாழ்த்துக்கள்



## செல்வன் சஞ்சயன் வசந்தகுமார்

கனடாவில் வசிக்கும் திரு,திருமதி வசந்தகுமார் ராஜவினோதா தம்பதிகளின் செல்வப்புதல்வன் சஞ்சயனின் 24வது பிறந்த நன்நாள் 27 ஜனவரி 2025 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் செல்வன் சஞ்சயனும் அவரது பெற்றோர்களும் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். அகவை இருபத்திநான்கு காணும் செல்வன் சஞ்சயன் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் பார் போற்றும் பைந்தமிழ் மகனாக வாழ வாழ்த்தும் அவரது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள்.

# உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் கனடா கிளைக்கு புதிய செயற்குழு தெரிவு!

உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் [INTERNATIONAL ASSOCIATION OF TAMIL RESEARCu (I.A.T.R.] எனப் படும் உலகளாவிய அனமப்பின் கனடாத் தேசியக் கிளையானது திரு. சண்முகம் குகதாசன் அவர் கள் தலைமையில் (தற்போதைய இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்) ரொறன்ரோ நகரில் 2019 இல் தோற்றுவிக்கப்பட்டதாகும்.

அப்பொழுது அமைப்புக்கு திருவாளர்கள் வி.எஸ். துரைராஜா சிவா வேலுப்பிள்ளை கேதாரநாதன் பொ.அருந்தவநாதன் திருமதி தேன்மொழியாள் கங்காதரன் முதலியோரை உள்ளடக்கிய செயற் குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

பல்வேறு காரணிகளால் கடந்த ஐந்தாண்டு காலப் பகுதியில் தொடர்ந்து இயங்க முடியாத நிலை யிலிருந்த இவ்வமைப்பானது 2024லிருந்து புதிய சூழலில் இயங்கத் தொடங்கியுள்ளது. அதுதொடர் பில் அதன் புதிய கூட்டமொன்று 23டிசம்பர் 2024 அன்று பிற்பகல் 8.00 மணியளவில் (கனடா – ரொறன்ரோ–நேரம்) இனைய வழியிலே நடை பெற்றது. திரு. சண்முகம் குகதாசன் அவர்கள் அக்கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார்.

அவர் தமது தலைமையுரையில் தாம் வகிக்கும் இலங்கை நாடாளுமன்றப் பதவி காரணமாக தொடர்ந்தும் இவ்வமைப்பின் தலைமைப் பொறு ப்பை வகிப்பதிலுள்ள சிரமத்தை எடுத்துரைத்தார். அத்துடன் தமக்குப் பதிலாகப் புதியவராக ஒரு தலைவராகத் தெரிவு செய்தல் வேண்டும் என்ப தான தமது கருத்தையும் முன்வைத்தார்

அவருடைய கருத்துக்கமைய புதிய தலைவர் தேர்வு நடைபெற்றது. தலைவர் குகதாசன் அவர் களே புதிய தலைவராக பேராசிரியர் கலாநிதி நா. சுப்பிரமணியம் அவர்களின் பெயரை முன்மொழிந் தார் அதனைச் செயலாளர் திரு. சிவா வேலுப் பிள்னள அவர்கள் வழி மொழிந்தார். அவையும் இம்முன்மொழினவ ஏகமனதாக ஏற்றுக் கொண் டது.

புதிய சூழலின் தேவைக்கேற்பச் செயற்குழுவும் மீளுருவாக்கம் செய்யப்பட்டது. துனைத்தலைவர் செயலாளர் பொருளாளர் இலக்கியத்துறைப் பொறுப்பாளர் மற்றும் கூத்து – நாடகத்துறை களின் பொறுப்பாளர் ஆகிய பதவிகளுக்கு முன் னரே அப்பதவிகளில் செயற்பட்டு வந்த உறுப் பினர்களே மீண்டும் ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

செயலாளருக்குத் துனையாகச் செயற்படுவதற்கு இனைச் செயலாளர் என்ற ஒரு புதிய பதவி நிலையும் தேவை என அவை உணர்ந்த நினல யில் முன்னைய செயற்குழுவில் இலக்கியத் துறைக்குப் பொறுப்பாளராகத் திகழ்ந்தவரே அப் பதவியையும் வகிக்கலாம் என்ற கருத்து அவை யில் முன் வைக்கப்பட்டு அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து புதிய துறைகள் சிலவற் றின் தேவையும் அவையால் உணரப்பட்டது. அவ்வகையில் இசை மற்றும் நடனத் துறைகள் இதழியல் மற்றும் ஊடகம் ஆகிய துறைகள் இனைய வழித் தொடர்பாடல் மற்றும் கருத்தரங்க இனைப்பு ஆகிய செயற்பாடுகள் ஆகியவற்றுக்கான பொறுப்பாளர்கள் சிலரும் இக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டனர்.

அவ்வகையில் புதிதாக உருவாக்கப்பட்ட செயற் குழுவின் முழு விவரம் வருமாறு.

தலைவர்: பேராசிரியர் கலாநிதி நா.சுப்பிரமணியம். .

துனைத் தலைவர்: திரு.வி.எஸ்.துரைராஜா.

செயலாளர்: திரு.சிவா வேலுப்பிள்னள.

இனைச்செயலாளர் மற்றும் இலக்கியத்துறைப் பொறுப்பாளர்: திருமதி தேன்மொழியாள் கங்காதரன்.

பொருளாளர்: திரு.இ.கேதாரநாதன்.

இனச மற்றும் நடனத்துறைகளின் பொறுப்பாளர்: கலாநிதி கௌசல்யா சுப்பிரமணியம்.

கூத்து – நாடகத்துறைகளின் பொறுப்பாளர்: திரு. பொன்னுத்துரை அருந்தவநாதன்.

இதழியல–ஊடகத்துனறப் பொறுப்பாளர்: திரு. ஐயம்பிள்னள சண்முகநாதன்.

இனையவழித் தொடர்பாடல் மற்றும் கருத்தரங்க இனைப்பு: திரு.சபாரத்தினம் சிவானந்தன்

திருமதி கலாநிதி குலமோகன்.

திரு. வேந்தன் பேரின்பநாதன்.

திருமதி. கஜானி குமார்.

திரு. இராஜ்குமார் குணரட்ணம்

செயற்குழு நியமனங்கனளத் தொடர்ந்து புதிய தலைவர் தனது செயல் திட்டங்கள் பற்றிய சிற்று ரையை நிகழ்த்தினார். குறிப்பாக எதிர்வரும் ஆண்டுகளில் மன்றம் எப்படிச் செயற்பட வேண்டும் என்பது தொடர்பான சில எண்ணங் களை அவர் அங்கு முன் வைத்தார்.

ஈழத்திலிருந்து புலம் பெயர்ந்தவர்களாகக் கனடா வில் வாழ்ந்து வரும் தமிழர் சமூகத்தின் வளர்ச்சியையும் வரலாற்றையும் ஆய்வு நிலையில் ஆவணப்படுத்தல் வேண்டும் என்றும் அது தொடர்பில் இனையவழிக் கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகள் ஆகியன நிகழ்த்தப்படல் வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறான செயற்பாடுகளில் தாய் அமைப்பான உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்துடனும் அதன் ஏனைய நாடுகளின் கிளையமைப்புகளுடனும் இணைந்தியங்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் அங்கு வலியுறுத்தினார். அதன் பின்னர் உறுப்பினர்களின் கலந்துனரயாடல் நிகழ்ந்தது.

முன்னாள் தலைவரான திரு.சண்முகம் குகதாசன் அவர்கள் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டதற்கான வாழ்த்துகளும் தெரிவிக்கப்பட்டன.

நிறைவாக திரு. ச. குகதாசன் அவர்கள் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்ற கனடாக் கிளையின் புதிய செயற்குழுவானது சிறப்புற்று செயலாற்ற வேண் டும் என்று வாழ்த்தியதோடு நன்றியும் தெரிவித்துக் கூட்டத்தினை நிறைவு செய்தார்.



# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்க்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com





AYUR CARE
KERALA AYURVEDA MASSAGE & THERAPY

# வலி நிவாரண

உத்தரவாதம்

ஐந்து அமர்வுகளில்

@கட்டுப்படியான $விலையில்







சிகிச்சை

கழுத்து மற்றும் தோள்பட்டைவலி
முதுகு வலி
முழங்கால் வலி
கால் வலி
கை வலி





KIZHI

உங்களை இயற்கையுடன் ஒன்றி வாழுங்கள்

எங்கள் சேவைகள்

- தலை மசாஜ்
- நீராவி குளியல்
- ஓய்வெடுத்தல்
- அரோமா மியூசிக் தெரபி
- தியானமும் புத்துணர்ச்சியும்
- முழு உடல் மசாஜ் மற்றும் நிராவி குளியல்


BOOK NOW
647-278-3846

240 ALTON TOWER CIRCLE,
UNIT 301, SCARBOROUGH,
ON M1V 4P2 VIA MCCOWAN RD.

ayurcaretoronto@gmail.com



சிவமயம்


# ஸ்ரீ கைலாசம்

சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை

அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)

அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு

**சைவக்குருக்களை**

தொடர்பு கொள்ளவும்

**"இணுவில் திருவூர்"**

**சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்**

**647.629.5468**

msvkurukkal@gmail.com

# என் இனமே! என் சனமே! உன்னை உனக்குத் தெரிகிறதா?

தமிழரசுக் கட்சியின் உள்முரண்பாடு நாடாளுமன்றத்திலும் பிரதிபலித்திருக்கின்றது. நாடாளுமன்றத்தில் சிறீதரன் சுமந்திரனுக்கு எதிராக உரையாற்றியிருக்கிறார். ஒரு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அந்தக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் வைத்து முறைப்பாடு செய்வது அநேகமாக இது தான் முதல் தடவையோ தெரியவில்லை.

விமான நிலையத்தில் சிறீதரன் சிறிது நேரம் மறித்து வைக்கப்பட்டமை தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பதில் சொல்ல வேண்டும். அதேசமயம் அது தொடர்பாக சுமந்திரன் தெரிவித்த கருத்துக்களுக்கு சுமந்திரன் பதில் சொல்ல வேண்டும். அந்தக் கருத்துக்கள் சரியா பிழையா என்பதனை விமான நிலைய நிர்வாகம் வெளிப்படுத்த வேண்டும்.

இது தொடர்பான விசாரணைகளை நடத்தி உண்மையை வெளியே கொண்டு வர வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. அதேசமயம் இந்த விடயத்தில் தமிழரசுக் கட்சிக்குள் நிலவும் தலைமைத்துவ முரண்பாடு பிரதிபலிப்புகளை ஏற்படுத்தியிருக்கிறது என்பதுதான் இங்கே இக்கட்டுரையின் குவிமையம்.

உட்கட்சிப் பூசல் நாடாளுமன்றம் வரை வந்து விட்டது. ஏற்கனவே அது நீதிமன்றம் வரை சென்று விட்டது. இனி அதை ஐநா மனித உரிமைகள் உரிமைகள் சபைக்கும் எடுத்துச் செல்லலாமா? அல்லது பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லலாமா? சிறிலங்காவின் இன அழிப்புச் சட்டங்களை நிறைவேற்றிய ஒரு நாடாளுமன்றத்தில் சிறீதரன் தன்னுடைய கட்சிக்காரருக்கு எதிராக முறைப்பாடு செய்கிறார்.

எந்த நாடாளுமன்றத்தில் தமிழ்த் தரப்பு நீதி கேட்டுப் போராடுகின்றதோ அதே நாடாளுமன்றத்தில் கட்சியின் உள்முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றது. தமிழ்த் தேசிய நோக்குநிலையில் இது ஒரு வீழ்ச்சி. இது முதலாவது சம்பவம்.

அடுத்த சம்பவம் சில வாரங்களுக்கு முன் இடம்பெற்றது. கிளிநொச்சியில், கனகபுரம் துயிலுமில்லத்தில் இடம் பெற்றது. புனர்வாழ்வு பெற்ற முன்னாள் இயக்கத்தவர்கள் சிலர் கனகபுரம் துயிலும் இல்லத்தை தாமும் நிர்வகிக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். அவர்களுக்குத் தலைமை தாங்குபவர் இரண்டு கண்களையும் இழந்தவர். அத் துயிலுமில்லம் கடந்த 15 ஆண்டுகளாக சிறீதரனுக்கு விசுவாசமானவர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. இரண்டு கண்களையும் இழந்த அந்த முன்னாள் இயக்கத்தவரும் உட்பட அவரோடு சம்பந்தப்பட்டவர்களுக்கும் சிறீதரனின் ஆதரவாளர்களுக்கும் இடையே அங்கு பலமான வாக்குவாதம் நடந்தது. முடிவில் பொலிசார் தலையிட்டு இரண்டு பகுதியையும் சமாதானப்படுத்தினார்கள்.

இதில் சம்பந்தப்படும் இரண்டு தரப்புகளுமே போரால் பாதிக்கப்பட்டவர்கள். இதில் சம்பந்தப்பட்ட இரண்டு தரப்புகளிலுமே புனர் வாழ்வு பெற்ற போராளிகள் உண்டு. துயிலுமில்லங்களை ஒரு பொதுவான நிர்வாகத்தின் கீழ் கொண்டு வர வேண்டும் என்று ஒரு தரப்பு கேட்கின்றது. இன்னொரு தரப்பு அதை ஏற்கனவே நிர்வாகித்தவர்களே தொடர்ந்தும் நிர்வகிக்க வேண்டும் என்று கூறுகிறது. இதில் யார் சொல்வது சரி என்று விவாதத்தைப் பிறகு வைத்துக் கொள்ளலாம்.

ஆனால் இது தொடர்பாக ஏற்பட்ட மோதலில் பொலிசார் தலையிட வேண்டி வந்தது. எந்தப் போலீஸ் கட்டமைப்பை இனஅழிப்பை முன்னெடுத்த சீறீலங்கா படைக்கட்டமைப்பின் ஒரு பகுதியாக தமிழ்த் தேசியவாதிகள் வர்ணிக்கின்றார்களோ, அதே போலிஸ் கட்டமைப்பு ஒரு துயிலுமில்ல விவகாரத்தில் தலையிட்டு இருதரப்பையும் சமரசப்படுத்த வேண்டிய நிலை. இரண்டாவது சம்பவம்.

துயிலுமில்லங்களின் விவகாரத்தில் மட்டுமல்ல. ஏற்கனவே காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் அம்மாக்களின் விடயத்திலும் ஒரு மோதல் ஏற்பட்ட பொழுது அவர்கள் பொலிசாரிடம் சென்று முறையீடு செய்தார்கள். யாரிடம் எதற்காக முறையீடு செய்வது என்பது தொடர்பாக தெளிவான அரசியல் பார்வை இல்லாத ஒரு சூழல்.

மேற்கண்ட இரண்டு சந்தர்ப்பங்களிலும் மோதல் யாருக்கு இடையில் என்று பார்த்தால் தமிழ்த் தரப்புக்களுக்கிடையில் தான். யாரிடம் போய் முறையிடுகிறார்கள் என்று பார்த்தால் யாருக்கு எதிராக நீதியைக் கேட்கின்றார்களோ அவர்களிடம் தான். தமிழ் அரசியல் எங்கே போய்க் கொண்டிருக்கிறது? தமிழ் அரசியல் என்று சொல்வதை விடவும் தமிழ்ச் சமூகம் எங்கே போய்க் கொண்டிருக்கிறது? என்று கேட்பது தான் அதிகம் பொருத்தமானது. ஏனென்றால் கனடாவில் உள்ள ஒரு கோவிலில் இரண்டு அணிகள் மோதிக்கொண்ட காட்சி காணொளியில் வெளிவந்தது. அவர்கள் எவ்வளவு ஆக்ரோஷமாக மோதிக் கொள்கிறார்கள்? அதில் முடிவில் போலீசார் தலையிடுகிறார்கள். அது கனேடியப் பொலிஸ். ஆனால் அந்த விவகாரம் ஒரு கோவில் சம்பந்தப்பட்ட.கடவுள் சம்பந்தப்பட்ட விவகாரம்.கடவுளின் சன்னிதானத்திலேயே ஒற்றுமையாக முடிவுகளை எடுக்கமுடியாத ஒரு சமூகமாக தமிழ் மக்கள் மாறி வருகிறார்கள்.

கனடாவில் மட்டுமல்ல யாழ்ப்பாணத்தின் பெரும்பாலான பெரிய ஆலயங்களுக்கு ஏதோ ஒரு வழக்கு இருக்கின்றது. அண்மையில் சிவத் தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் நூற்றாண்டு நினைவையிட்டு நடந்த ஒரு வைபவத்தில் உரை நிகழ்த்திய வட மாகாண சபையின் ஆளுநர் பின்வருமாறு தெரிவித்திருக்கிறார்□

ஆலயங்கள் இப்பொழுது சமூக சேவைக்கு செலவழிப்பதை விடவும் வழக்குகளுக்கே அதிகமாகச் செலவழிக்கின்றன.□கனடாவில் இருந்து யாழ்ப்பாணம் வரையிலும் கோவில் அறக்கட்டளைகளில் பிணக்குகளும் வழக்குகளும் உண்டு. கொழும்பில் வசிக்கும் ஒரு பேராசிரியர் சட்டம் பயிலும் தனது மகனிடம் சொன்னாராம், நீ கோவில் வழக்குகளை மட்டும் எடுத்தாலே போதும் வாழ்க்கை முழுவதும் உனக்கு உழைப்பு இருக்கும் என்று அந்தளவுக்கு கோவில்கள் நீதிமன்றத்தில் நிற்கின்றன.

இந்துக் கோவில்கள் மட்டுமல்ல நவீன யாழ்ப்பாணத்தைச் செதுக்கிய திருச்சபைகளில் ஒன்று என்று வர்ணிக்கப்படுகின்ற தென்னிந்தியத் திருச்சபையும் நீதிமன்றத்தில் நிற்கின்றது. கட்சியும் நீதிமன்றத்தில், கோவில்களும் நீதிமன்றத்தில், திருச்சபைகளும் நீதிமன்றத்தில் பழைய மாணவர் சங்கங்களும் நீதிமன்றத்தில், ஏன் தமிழ் மக்கள் தங்களுக்கு இடையிலான பிணக்கைத் தங்களுக்குள்ளேயே தீர்த்துக் கொள்ள முடியாமல் இருக்கிறார்கள்? அல்லது அவ்வாறான பிணக்குகளைத் தீர்த்து வைக்கக்கூடிய மூத்த சமூகத் தலைவர்கள், மதத் தலைவர்கள், அரசியல் வாதிகள் வழிகாட்டிகள் முன்னோடிகள் தமிழ்மக்கள் மத்தியில் இல்லையா?




இருக்கிறார்கள்.ஆனால் எல்லாரையுமே மீம்ஸ்□ ஆக்கி விடும் ஒரு போக்கு அதிகரித்து வருகிறது. சமூகத்தில் யார் துருத்திக் கொண்டு தெரிகிறார்களோ யார் சமூகப்பணி செய்கிறார்களோ யார் அர்ப்பணிப்பும் தியாகமும் மிக்க இறந்த காலத்தைக் கொண்டிருக்கிறார்களோ, அவர்களை அடுத்த தலைமுறை மதிப்பது குறைந்து வருகிறது. மூத்த முன்னோடிகளாய் இருக்கின்ற, அனுபவஸ்தர்களை மதிக்காத ஒரு சமூகம் எப்படி உருப்படும்?

ஊடகங்களுக்குச் செய்திப் பசி.ஆனால் அந்த பசிக்கு தீனியாகக் கிடைத்திருப்பது தேசம். அந்த பசிக்கு இரையாகிக் கொண்டிருப்பது தேசத் திரட்சி. ஒரு பகுதி ஊடகங்கள் தமிழ்மக்கள் மத்தியில் உள்ள உள் முரண்பாடுகளையும் அக முரண்பாடுகளையும் விடுப்பாக்கி தமது உழைப்பைப் பெருக்கப் பார்க்கின்றன.



கேட்டால் ஜனநாயகம், நடுநிலைமை, ஊடக தர்மம் □ என்றெல்லாம் கூறுகிறார்கள். எல்லா ஊடகங்களுக்கும் தர்மம் இருக்கிறதோ இல்லையோ அஜெண்டா இருக்கும். அது ஒரு உழைப்புக்கான அஜெண்டா. சில சமயம் அந்த அஜெண்டாவுக்குப் பின் கட்சிகள் இருக்கலாம். கட்சிப் பிரமுகர்கள் இருக்கலாம். வேறு தரப்புகளும் இருக்கலாம்.அஜெண்டா இல்லாத ஊடகங்கள் கிடையாது. குறைந்த பட்சம் வியூவர்களின் தொகையைக் கூட்டவேண்டும் என்ற அஜெண்டாவாவது இருக்கும். ஆனால் இந்த எந்த ஒரு அஜெண்டாவும் தேசத்தைத் திரட்டும் அரசியலுக்கு எதிரானது. தேசத்தை திரட்ட வேண்டும் என்று உழைக்கும் ஊடகங்கள் அதை நோக்கித்தான் நேர்காணல்களை எடுக்கும் கருத்துக்களை உருவாக்கும். யுடியூப்களில் தலைப்புக்கும் உள்ளடக்கத்துக்கும் இடையே உள்ள இடைவெளிக்குள் ஊடக தர்மம் தொழில்சார் திறன்கள் எல்லாமே அழிந்து போகின்றன. நோபல் பரிசு பெற்ற தென்னாபிரிக்க ஆயர் டெஸ்மண்ட் டுடு கூறுவது போல ஒடுக்கும் தரப்புக்கும் ஒடுக்கப்படும் தரப்புக்கும் இடையில் நடுநிலை காப்பது என்பது ஒடுக்குமுறைக்குச் சேவகம் செய்வதே. தேசத் திரட்சியைப் பாதுகாப்பதா? அல்லது டொலர்களுக்காகத் தேசத் திரட்சியைக் குலைப்பதா?



கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –


இவ்வாறாக தேசத் திரட்சிக்கு வழி காட்டாத ஊடகங்களின் தொகை பெருகிக் கொண்டு வரும் ஒரு சமூகம் மூத்தவர்களை அனுபவஸ்தர்களை சமூகப் பெரியார்களை மதியாத ஒரு சமூகம், தனக்குள் ஏற்படும் பிணக்குகளுக்கெல்லாம் நீதிமன்றத்திற்குப் போகும் ஒரு சமூகம்.தன் கட்சிக்காரருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் முறைப்பாடு செய்யும் ஒரு சமூகம்.இன அழிப்புக்கு எதிராக நீதியைப் பெறுவதற்காக ஒன்று திரண்டு போராட முடியுமா?

ஒருபுறம் மூன்றாவது புலப்பெயர்ச்சி அலை.மக்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். இன்னொருபுறம், சமூகத்துக்கு வழிகாட்ட வேண்டியவர்கள் கீழ்த் தரமாக விமர்சிக்கப்படுகிறார்கள். அல்லது வழிகாட்டிகளாக முன்னுதாரணமாக நிற்க வேண்டியவர்கள் நீதிமன்றத்திற்கு வழிகாட்டுகிறார்கள். இது இப்படியே போனால் தமிழ்ச் சமூகம் ஒரு தேசமாக நிமிர முடியுமா?

ஒரு காலம் முழு உலகத்தையும் திரும்பிப் பார்க்க வைத்த ஒரு சமூகம், பண்பாட்டுச் செழிப்பு மிக்க ஒரு நடுத்தர வர்க்கத்தைக் கொண்ட ஒரு சமூகம், இப்பொழுது ஏன் இப்படித் தூர்ந்து போகின்றது? தன்னுடைய பற்களை தானே கிண்டி மணக்கும் ஒரு சமூகமாக எப்படி மாறியது?

தாயகமும் புலம்பெயர்ந்த தமிழர்களும் இணைந்து இந்தச் சீரழிவைத் தடுக்க முன்வர வேண்டும். இந்தச் சீரழிவுக்குக் காரணங்கள், போரும் புலப்பெயர்ச்சியும் தலைமைத்துவ வெற்றிடமும் வெளிச் சக்திகளுமே. சமூகத்துக்காகத் தம்மை (22ம் பக்கம் பார்க்க)

# நீளப் போகும் ஆதிக்கப் போட்டி

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



யில் அணிசேரா கொள்கையை கடைப்பிடிப்பதாக கூறிக் கொண்டாலும், அந்த நிலையில் இருந்து வெளியேறி அல்லது விலகி நீண்டகாலம் ஆகி விட்டது. விடுதலைப் புலிகளின் காலத்துக்குப் பின்னர், அவர்கள் அழிக்கப்



பட்ட பின்னர், அணிசேரா கொள்கையை முழுமையாகப் பின்பற்றக் கூடிய நாடு என்ற தகைமையை இலங்கை இழந்து விட்டது. விடுதலைப் புலிகளுக்கு பின்னரான இலங்கை மாறி மாறி இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே ஒளித்துப் பிடித்து விளையாடும், ஆட்டத்தையே ஆடிக் கொண்டிருக்கிறது. ஆட்சி மாற்றங்களினால் கூட, இந்த ஆட்டத்தை நிறுத்த முடியவில்லை. மஹிந்த ராஜபக்‌ஷவின் ஆட்சிக் காலத்தில் தொடங்கிய இந்த ஆட்டம், இன்றைய அரசாங்கம் வரை நீடித்துக் கொண்டிருக்கிறது.

மஹிந்த ராஜபக்‌ஷவுக்கு பிறகு ஆட்சிக்கு வந்த மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்‌ஷ, ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை கடுமையாக விமர்சித்து வந்த தேசிய மக்கள் சக்தி, இப்பொழுது அதே ஆட்டத்துக்குள் சிக்கிப் போயிருக்கிறது. அண்மையில் சீனாவுக்கு பயணம் மேற்கொண்டு திரும்பிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அதற்கு முன்னதாக இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டிருந்தார்.

இந்த இரண்டு பயணங்களின் போதும் இரண்டு நாடுகளின் அரசாங்கங்களும் இணைந்து ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டிருந்தன. இந்தக் கூட்டறிக்கைகள் இரண்டும், வெளியிடப்பட்டதன் அடிப்படை நோக்கம், புது டெல்லியிலும் பெய்ஜிங்கிலும் பேசப்பட்ட விடயங்களை இணக்கம் காணப்பட்ட விடயங்களை முழுமையாக வெளியே கூறாமல் தவிர்த்துக் கொள்வது தான். மிகக் கவனமாக வார்த்தைகளை கையாண்டு தயாரிக்கப்பட்ட இந்த கூட்டறிக்கைகள் மூலமாக அநுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கம், தங்களை பாதுகாத்துக் கொள்ளலாம் என கருதி இருந்தது.

ஆனால், அதற்கு மாறாக, இந்த கூட்டறிக்கையின் ஒளிவு மறைவுகளும், அவற்றில் இடம் பெற்றுள்ள விடயங்களும் அரசாங்கத்துக்கு எதிரான கடுமையான விமர்சனங்களை உருவாக்கியிருக்கிறது.

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் ஜனாதிபதி அநுரகுமார மேற்கொண்ட பயணங்களின் மூலம் இரண்டு நாடுகளுக்கும் இடையே, இலங்கைத் தீவு மிகமோசமான சூழலில் சிக்கி இருக்கிறது என்பதை தெளிவாக புரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. இந்த சிக்கல், மாறி மாறி ஆட்சிக்கு வந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு அரசாங்கத்துக்கும் இருந்து வருகிறது. அதில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கு ஒவ்வொரு அரசாங்கமும் ஒவ்வொரு உத்தியை கையாளுகின்றன.

சில அரசாங்கங்கள் சீனாவை பகைக்காமல் இந்தியாவை அரவணைத்துக் கொண்டன. சில அரசாங்கங்கள் இந்தியாவை பகைக்காமல் சீனாவை அரவணைக்க முயன்றன. எவ்வாறாயினும் எந்த ஒரு அரசாங்கத்தினாலும் இந்த இரண்டு நாடுகளின் பிடிக்குள் சிக்கிக் கொள்ளாமல் இருக்கவும் முடியவில்லை.

தனி ஒரு நாட்டை சார்ந்து இருக்கவும் முடியவில்லை. ஏனென்றால், இரண்டு நாடுகளும் இலங்கை தீவுக்கு மிக மிக முக்கியமானவை. இந்த இரண்டு நாடுகளையும் உதறித் தள்ளி விட்டோ ஒதுக்கி வைத்து விட்டோ, இலங்கைத் தீவினால் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாது.

பூகோள அரசியல் போட்டியில் இரண்டு நாடுகளும் தவிர்க்க முடியாத எதிர் எதிர் முனைகளில் இருப்பவையாக இவற்றுக்கு இடையில் சமரசம் செய்து கொள்வதோ, உறவுகளைச் சமநிலைப்படுத்திக் கொள்வதோ இயலாத காரியமாக இன்று வரை நீடிக்கிறது. இலங்கையை பொறுத்தவரை பூகோள அரசியல் என்பது, இலங்கைக்கு சவாலான பல சூழ்நிலைகளை உருவாக்கி இருக்கிறது. நெருக்கடிகளை ஏற்படுத்தியிருக்கிறது. விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டிருக்கிறார்கள். பிரிவினைவாதம் தோற்கடிக்கப்பட்டிருக்கிறது அல்லது நாட்டை பிளவுபடுத்தும் ஆயுதப் போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது, அரசாங்கத்தின் மொழியில், பயங்கரவாதம் அல்லது தீவிரவாதம் தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலமாக, இந்தியா, சீனா, அமெரிக்கா போன்ற சர்வதேச சக்திகள், இலங்கையை தங்களின் அதிகாரத்தை நிலைநாட்டும் இடமாக மாற்றி விட்டன.

விடுதலைப் புலிகள் இருந்த வரைக்கும், இத்தகைய போட்டி ஒன்று, வெளிப்படையாக இருந்ததில்லை. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் இந்தியப் பெருங்கடலில் அத்தகைய போட்டி உருவாகியிருந்தாலும், இலங்கைக்குள் அது வந்திருக்கவில்லை.

ஏனென்றால், இலங்கை ஏற்கெனவே விடுதலைப் புலிகளுடன் கரையிலும் கடலிலும் மோதிக் கொண்டிருந்தது. அதைவிட விடுதலைப் புலிகளைத் தாண்டி வடக்கு, கிழக்கில் சீனாவோ பிற நாடுகளோ காலூன்ற முடியாத ஒரு சூழல் காணப்பட்டது. அது இந்தியாவுக்கு சார்பானதாகவும் இருந்தது. இன்றைக்கு அந்த நிலை இல்லை.

வெறுமையாக மாறிய இலங்கை கடற்பரப்புக்குள், சீனா தனது செல்வாக்கை நுழைக்க தொடங்கியதும், இந்தியா பதற்றம் அடைந்திருக்கிறது. அதையடுத்து, சீனாவுக்கு இந்தியா தடை போட, சீனா அதற்கு தடை போட, மாறி மாறி இரண்டு தரப்புக்களும் தடம் போட்டு விழுத்துகின்ற காரியத்தை நடத்திக் கொண்டிருக்கின்றன.

இந்தச் சூழலில் இலங்கை அரசாங்கத்தினால் இரண்டு தரப்புகளுக்கும் நடுவே ஒளித்துப் பிடித்து விளையாட வேண்டிய நிலை தான் ஏற்பட்டிருக்கிறது. அவ்வப்போது தோன்றுகின்ற சர்ச்சைகளை புதுடெல்லிக்கும் பெய்ஜிங்கிற்கும் சென்று தீர்த்துக் கொண்டு வருவதற்குள், அடுத்தது பிரச்சினை முளைத்து விடும். இப்படியே மாறி மாறி இலங்கை தனது இராஜதந்திர திறனை இழந்து கொண்டிருக்கிறது. தனக்கான ஒரு தெளிவான வழியை அது கையாள முடியாமல் இருக்கிறது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, சீனப் பயணத்தின் போது கையெழுத்திட்ட இணக்கப்பாடுகள் மற்றும் வெளியிட்ட கூட்டறிக்கையின் படி, சிக்கலான சூழ்நிலைகளுக்குள் இலங்கை சிக்கிக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என எச்சரிக்கைகள் விடுக்கப்படுகின்றன.



சோசலிச முன்னிலை கட்சியின் செயலாளர் புபுது ஜாகொட உலகளாவிய அரசியல் பொறிக்குள் இலங்கை சிக்கிக் கொண்டிருப்பதாக கூறியிருக்கிறார். ஒரு பக்கத்தில் சீனாவுடன் சேர்ந்து செயற்படுவதாக, அதன் திட்டங்களுடன் சேர்ந்து இணங்குவதாக கூறப்பட்டுள்ள கூட்டறிக்கையில், இன்னொரு பக்கம் இந்தியாவுக்கு சார்பாக செயல்படுவதாக கூறப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

இந்த நிலையானது, பிராந்தியத்தில் அதிகாரமுடையவர்கள் ஏகாதிபத்திய வாதிகளுக்குள் ஏற்படுகின்ற சண்டைகளின் போது இலங்கை முழுமையாக அதற்குள் இழுக்கப்படுவதற்கான சாத்தியம் இருப்பதாக அவர் நம்புகிறார்.

வடக்கு, கிழக்கை இந்தியாவின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதற்கும், அம்பாந்தோட்டை உள்ளிட்ட தென் மாகாணத்தின் பிரதேசங்களை சீனாவுக்கு வழங்க மறைமுகமாக ஒப்புதல் வழங்கும் வகையில், கூட்டறிக்கைகள் அமைந்திருப்பதாக அவர் சுட்டிக் காட்டியிருக்கிறார். அதுபோல ஏற்கனவே திருகோணமலை எரிபொருள் தாங்கிகளின் உரிமையை, இந்தியாவுக்கு வழங்கியுள்ள நிலையில், அம்பாந்தோட்டை அருகே புதிதாக எரி பொருள் சுத்தி கரிப்பு நிலையம் அமைப்பதற்கு சீனாவுக்கு அனுமதி கொடுத்திருப்பதையும் அவர் கடுமையாக விமர்சித்திருக்கிறார். இதன் மூலம் சீனா முழுமையாக பொருள் விநியோகத்தை தன் வசம் எடுத்துக் கொள்ளும் என்றும், அம்பாந்தோட்டை துறைமுகத்தில் கப்பல்களுக்கு எரிபொருள் நிரப்புகின்ற வாய்ப்பை, அதுவே பயன்படுத்திக் கொள்ளும் என்றும், கொழும்பு துறைமுகத்திற்கு கிடைக்கின்ற வாய்ப்புகளை கூட, சீனாவிடம் இழக்கின்ற நிலை ஏற்படும் என்றும் அவர் எச்சரித்திருக்கிறார்

இவற்றையெல்லாம் பட்டியல் போட்டு தான் அவர், உலகளாவிய அரசியல் பொறிக்குள் இலங்கை சிக்கி இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார். இதே கருத்து அரசியலாளர்கள் மத்தியில் இப்பொழுது வலுவாக எடுத்துரைக்கப்படுகிறது. தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வருவதற்கு, முன்னர் இந்தியாவையும் பகைத்துக் கொள்ளாமல் சீனாவையும் பகைத்துக் கொள்ளாமல் தனித்துவமான முறையில் அணிசேரா கொள்கையின் அடிப்படையில் செயல்படுவோம் எனக் கூறியிருந்தது.

ஆனால் இந்த இரண்டு நாடுகளையும் தவிர்க்கவும் முடியாமல் சேர்க்கவும் முடியாமல், இடை நடுவில் தத்தளிக்கும் நிலையில் இலங்கை இருக்கிறது. பிராந்திய அதிகாரப் போட்டியில் இருந்து இலங்கை தப்பிக் கொள்ள முடியாது என்பதே, இந்த கூட்டறிக்கைகளின் மூலம் வெளிப்பட்டிருக்கின்ற உண்மை.

அது சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில், முரண்பாடுகளும் ஆதிக்கப் போட்டியும் நீளுகின்ற காலம் வரை, இலங்கையை பதற்றத்துக்குள்ளேயே வைத்திருக்கப் போகிறது.

# யாழ்ப்பாணத்தில் மிக உயரமான கட்டிடத்தின் பெயரை ஏன் மாற்றினார்கள்?

தமிழ்ப் பகுதிகளில் கடலட்டை ஒரு இராஜதந்திரப் பொருளாகி விட்டது. காற்றாலை ஒரு இராஜதந்திரப் பொருளாகி விட்டது. ஒரு கலாச்சார மண்டபமும் அதன் பெயரும் இராஜ தந்திரப் பொருட்களாகி விட்டன.

தமிழர்களுக்கான குறிப்பாக யாழ்ப் பாணத்துக்கான இந்திய அரசாங்கத் தின் பரிசு என்று வர்ணிக்கப்படும் யாழ்ப்பாண கலாச்சார மண்டபம் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான தமிழர்கள் சார்ந்த பலப் பிரயோகத்தின் குறியீடா?

ஒரு பெரிய நாடு அயலில் உள்ள ஒரு சிறிய நாட்டின் சிறிய மக்கள் கூட்ட த்துக்கு பரிசாகக் கட்டிய கலாச்சார மண்டபம் என்று பார்த்தால் உலகி லேயே மிகப்பெரியது இந்த கலாச்சார மண்டபம் தான். உலகின் வெவ்வேறு பகுதிகளில் இது போன்ற வெவ்வேறு கட்டுமானங்களை வெளிநாடுகள் கட்டிக் கொடுத்திருக்கின்றன. ஆனால் அவ்வாறு ஒரு மக்கள் கூட்டத்துக்கு பரிசாக என்று கூறிக் கட்டப்பட்ட கலாச்சார மண்டபங்களில் ஆகப் பெரியது யாழ். கலாச்சார மண்டபம் தான்.

அந்த மண்டபம் 10 மாடிகளைக் கொண்டது. யாழ்ப்பாணத்தின் சுண ணக்கல் தரையமைப்பைப் பொறுத்த வரை ஆறு மாடிகளுக்கு மேல் கட்டுவதற்கு விசேஷ அனுமதிகள் தேவை. யாழ்.கலாச்சார மண்டபம் அவ்வாறான விசேஷ அனுமதிகளோடு விசேஷ கட்டுமானத் தொழில்நுட்பங் களைப் பயன்படுத்திக் கட்டப்பட்டது. அதனால் தான் வடக்கு கிழக்கில் உள்ள ஆக உயரமான-10 மாடிக் கட்டடமாக அது கட்டி எழுப்பப் பட்டது.

தமிழ்ப் பகுதிகளில் உள்ள மிக உயரமான கட்டிடமும் அதுவே தமிழ்ப் பகுதிகளில் கட்டி முடிக்கப் பட்ட பின் முழுமையாகத் திறக்கப் படாத, முழுமையாகப் பயன்படுத்தப் படாத ஆகப் பெரிய பொதுக் கட்டடமும் அதுவே.

கடந்த 18ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகம் குறிப்பிட்ட எண்ணிக்கையான சிலரை கலாச்சார மண்டபத்துக்கு வருமாறு அழைத்தது. வழமையாக அங்கே நடக்கும் சந்திப்புகள் கலாச்சார நிகழ்வுகளைப் போன்று ஏதோ ஒரு நிகழ்வுக்காகத் தான் அழைக்கப்படுவ தாகக் கருதி அழைக்கப்பட்டவர்கள் சென்றார்கள். கலாச்சார மண்டபத்தின் ஒரு பகுதியில் அமைந்திருக்கும் சிறிய கைக்கடக்கமான மண்டபத்தில் நிகழ்வு இடம்பெற்றது.

அதில் ஊடகவியலாளர்கள், கலைஞர் கள், அரச அதிகாரிகள், ஊடக முதலாளிகள் உள்ளடங்கலாக மிகச் சிறிய தொகையினர் காணப்பட்டார்கள். நிகழ்வில் முதலில் பேசியவர் இலங் கையின் புத்தசாசன அமைச்சர். அவர் பேச வரும்போது கையில் ஒரு புத்தகத்தை வைத்திருந்தார். பேச்சின் போது அது சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்ட திருக்குறள் என்று கூறினார். அது முதலாவது மொழி பெயர்ப்பு என்றும் 1961ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது என்றும் அதன்பின் பல்வேறு மொழிபெயர்ப்புகள் வந்து விட்டதாகவும் அவர் அங்கு சொன் னார். திருக்குறளைப் புகழ்ந்து பேசி னார்.

அதன்பின் கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் பேசினார். அவரும் திருக்குறளைப் புகழ்ந்து பேசினார். அந்த கலாச்சார மண்டபம் லோக்க லான அதாவது உள்ளூர் நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றிடம் கையளிக்கப் பட வேண்டும் என்று பேசினார். மேலும் அதை முழுமையாக உபயோக த்துக்குக் கொண்டு வர வேண்டும்



என்றும் பேசினார். முடிவில் டிஜிட்ட லாக அந்த மண்டபத்தின் பெயர் திருவள்ளுவர் கலாச்சார மண்டபம் என்று மாற்றப்பட்டது.

ஒரு மக்கள் கூட்டத்துக்கு பரிசாக வழங்கப்பட்ட ஒரு கட்டடத்தின் பெயரை, அந்த மக்கள் கூட்டத்தைச் சேர்ந்த சமூகத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், புத்திஜீவிகள், கலைஞர்கள் போன்றோரைக் கலந்தா லோசிக்காமல் இரகசியமாக மாற்றி யமை என்பது பரவலாக விவாதிக்கப் படும், விமர்சிக்கப்படும் ஒரு விடய மாக மாறியது. பெயர் மாற்ற நிகழ்வில் பேசிய கொழும்புக்கான இந்திய தூதர் லோக்கல் கட்டமைப்பின் மூலம் அதை நிர்வகிக்கப்பட வேண்டும் என்று பேசியிருந்தார். ஆனால் பெயர் மாற்ற விடயத்தில் உள்ளூர் உணர்வு கள் கவனத்தில் எடுக்கப்படவில்லை.

ஏன் அவ்வாறு பெயர் மாற்றப்பட்டது என்று விசாரித்த பொழுது, உலகப் பொது மறையை எழுதிய வள்ளுவரின் பெயரைச் சூட்டுவதன் மூலம் அந்த மண்டபத்துக்கு உலகளாவிய ஒரு பரிமாணத்தை கொடுக்க முடியும் என்று கருதியதாகவும், அது பிரதேசம் கடந்த, மதம் கடந்த ஒரு குறியீடாக நிற்கும் என்று எதிர்பார்த்ததாகவும் இந்திய தூதரக வட்டாரங்கள் கருத்து தெரிவித்தன.

இந்தியப் பிரதமர், இந்திய வெளியுறவு அமைச்சர் போன்றவர்கள் தெரிவித்த கருத்துக்களும் அவ்வாறு தான் காண ப்படுகின்றன. அதேசமயம் உள்ளூர் உணர்வுகளைக் கவனத்தில் எடுக்கா மல் அவ்வாறு பெயர் மாற்றியதன் விளைவுகளைத் தாம் உணர்ந்திருப் பதாகவும், அது தொடர்பாக டெல்லி க்கு அறிவிக்கப்பட்டிருப்பதாகவும், அந்த அடிப்படையில் மண்டபத்தின் பெயரில் யாழ்ப்பாணம் என்ற சொல் மீண்டும் சேர்க்கப்பட்டதாகவும் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணம் என்பது ஒரு புவியியல் பதம் மட்டும் அல்ல. அதை விட ஆழமான பொருளில், அது ஒரு பண்பாட்டுப் பதம். ஓர் அரசியல் பதம். ஈழத் தமிழர்களின் கலாச்சார தலை நகரங்களில் ஒன்று என்ற அடிப்படை யில் அது ஈழத் தமிழ் அடையாளங் களில் முக்கியமானது. எனவே அந்தப் அரசியல்.பண்பாட்டுப் பெயரை மாற்றி யமை ஈழத் தமிழர்களின் அரசியல் மற்றும் பண்பாட்டு உணர்வுகளைப் புண்படுத்துவதாக அமைந்திருப்ப தைத் நாம் உணர்ந்திருப்பதாக இந்தியத் துணைத் தூதரக வட்டார ங்கள் தெரிவித்தன.

அப்பெயர் மாற்றத்திற்கு உத்தியோக பூர்வமாக கூறப்படும் காரணம் எது வாகும் இருக்கலாம். ஆனால் அதற் குப் பின்னால் வேறு ஒரு ராஜதந்திர இலக்கு உண்டா என்ற கேள்வியுண்டு.

கட்டி முடிக்கப்பட்ட பின் இன்றுவரை முழுமையாகக் கையளிக்கப்படாத, முழுமையாகத் திறக்கப்படாத ஒரு பொதுக் கட்டிடம் அது. ஏன் அவ் வாறு முழுமையாக கையளிக்கவோ அல்லது திறக்கவோ முடியவில்லை? ஏனென்றால் அதில் இரண்டு விடயங் கள் சம்பந்தப்படுகின்றன.

முதலாவது, தமிழ் மக்களுக்கு உரிய தன்னாட்சி அதிகாரத்தின் அளவை அளக்கும் ஒரு கட்டடம் அது. இரண்டாவது தமிழ் மக்களுக்கான தன்னாட்சி அதிகாரம் தொடர்பில் கொழும்பில் உள்ள மத்திய அரசாங்க த்தின் மீது இந்தியா பிரயோகிக்கக் கூடிய அழுத்தங்களின் அளவைக் குறிக்கும் ஒரு கட்டடம் அது.

பிரதமர் மோடி அதனை சில ஆண்டு களுக்கு முன்பு மென் திறப்பு என்று கூறி அரைவாசி திறந்து வைத்தார். அதற்குப் பின்னர் இரண்டு அரசாங்க ங்கள் வந்துவிட்டன. ஆனால்




இப்பொழுதும் அதனை முழுமை யாகத் திறக்க முடியவில்லை. ஏன்?

அந்த மண்டபத்தை இந்தியா தமிழர் களுக்கான பரிசு என்று கூறுகிறது. அதை தமிழர்களையும் உள்ளடக்கிய குறிப்பாக யாழ்.மாநகர சபை நிர்வாக த்தையும் உள்ளடக்கிய, ஒரு கட்ட மைப்புத் தான் பரிபாலிக்க வேண்டும் என்று இந்தியா எதிர்பார்க்கின்றது. ஆனால் இதுவரையிலும் இருந்த இலங்கை அரசாங்கங்கள் அதற்குச் சம்மதிக்கவில்லை. அது கூடுதலான பட்சம் கொழும்பில் உள்ள மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும் என்று கொழும்பில் இதுவரையிலும் இருந்த அரசாங்க ங்கள் சிந்தித்தன.


மணிவண்ணன் யாழ்.மாநகர சபை முதல்வராக இருந்த காலத்தில் ஒரு சந்திப்பு கொழும்பில் இடம்பெற்றது. அதில் இந்திய துணைத் தூதுவரும் பங்கு பற்றினார். உரையாடலின் போது அந்தப் பெரிய மண்டபத்தை பரிபாலிப் பதற்கு வேண்டிய நிதிக் கொள்ளளவு மாநகர சபையிடம் இல்லை என்பது சுட்டிக் காட்டப்பட்டது. எனினும் தனக்கு நிதி உதவி வழங்கப்பட்டால் தான் அதனை நிர்வாகிக்கத் தயார் என்று மணிவண்ணன் தெரிவித்திரு க்கிறார். அந்த நிதியை குறிப்பிட்ட காலத்துக்கு இந்தியா வழங்கும் என்று இந்திய துணைத் தூதுவர் தெரி வித்துள்ளார். அப்பொழுது சந்திப்பில் பங்கு பற்றிய கலாச்சார அமைச்சின் செயலாளர்- அவர் ஒரு மருத்துவர்- மணிவண்ணனைப் பார்த்துப் பின் வருமாறுகூறியுள்ளார்..□நீங்கள் இந்தி யாவை நம்பக் கூடாது எங்களைத் தான் நம்ப வேண்டும்என்று.

மேலும் அந்த மண்டபத்தில் உள்ள ஒரு மாடியைத் தனது அமைச்சுக்குத் தருமாறு நாமல் ராஜபக்ச முன்பு அமைச்சராக இருந்த பொழுது கோரிக்கை விடுத்ததாகச் செய்திகள் வெளிவந்தன. அது போலவே யாழ்ப்பா ணத்தில் உள்ள சிறீலங்கா படைத் தரப்பும் அதில் இரு மாடிகளை தமது பிரயோகத்துக்குத் தருமாறு கேட்ட தாக ஒரு தகவல் உண்டு.ஆனால் இந்தியத் துணைத் தூதரகம் அந்த வேண்டுகோள்களை சாதகமாகப் பரிசீலிக்கவில்லை என்றும் கூறப்படு கிறது. இதுதான் இந்த மண்டபத்தை சூழ்ந்திருக்கும் அரசியல் யதார்த்தம்.

அதனால் தான் அந்தக் கட்டடத்தை மென் திறப்பு என்று அரைவாசி திறக்க வேண்டியிருந்தது. அதைத் திறந்து இத்தனை ஆண்டுகளின் பின்னரும் முழுமையாக திறக்க வேண்டும் என்று கோரிக்கை விட வேண்டியிருக்கிறது. இப்பொழுது கொழும்பில் புதிய அரசாங்கம் வந்திருக்கிறது. அந்த அரசாங்கத்தை இந்த விடயத்தில் சம்மதிக்கச் செய்யலாமா என்று இந்தியா சிந்திக்கக்கூடும்.

குறிப்பாக அரசுத் தலைவர் சீனாவுக் குச் சென்று வந்த சில நாட்களில் இந்த விடயத்தை ஒரு பேசு பொரு ளாக்க இந்தியா விரும்பியிருக்கலாம். மண்டபத்தின் பெயரில் யாழ்ப்பாணம் என்ற அரசியல் பதத்தை அகற்றினால் கொழும்பை நம்பச் செய்யலாம் என்று இந்தியா சிந்தித்ததா? ஆனால் பெயர் மாற்ற விவகாரம் ஒரு சர்ச்சையாக மாறிய பின்னணியில், அந்நிகழ்வில் பங்கு பற்றிய அமைச்சர் சந்திரசேகரன் இந்த விடயத்தில் தமிழ் வாக்காளர் களின் உணர்வுகளைத் திருப்திப்படுத் தும் நோக்கத்தோடு பதில் கூறியிருக் கிறார். (22ம் பக்கம் பார்க்க)

# Friends MATRIMONY



**www.friendsmatrimony.com**
**+1 647 709 1761 | +1 647 709 1536**
**+1 647 700 7208 | +1 416 477 6854**
**GTA Squre-5215 Finch Ave. E. Unit 256 and 257**
**Toronto, M1S 0C2**

## மணமகள்

- **ID08121123** (F) — 26yrs, 5'7" , Single , Hastham , N/A Sevai , High School , No work , Sri Lanka
- **ID08121122** (F) — 33yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Researcher , Canada
- **ID08121119** (F) — 46yrs, 5'5" , Single , Uthiraadam , 10 Sevai , Bachelors.. , Law Clerk , Canada
- **ID08121116** (F) — 30yrs, 5'4" , Divorced , , Sevai , Masters Degree , , India
- **ID08121115** (F) — 24yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , High School , Accounting , Canada
- **ID08121111** (F) — 37yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Teacher , Sri Lanka
- **ID08121110** (F) — 33yrs, 5'3" , Single , Moolam , 12 Sevai , Masters Degree , Doctor , Canada
- **ID08121109** (F) — 34yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Masters Degree , Counselor , Canada
- **ID08121107** (F) — 28yrs, 5'4" , Single , , Sevai , Bachelors.. , IT , Switzerland
- **ID08120320** (F) — 29yrs, 5'4" , Single , Kettai , 4 Sevai , Bachelors.. , Finance Professional , Canada
- **ID08120054** (F) — 34yrs, 5'5" , Divorced , Rohini , 4 Sevai , Diploma , Farmacy Technician , Canada
- **ID08119833** (F) — 32yrs, 5'4" , Single , Aayilyam , 4 Sevai , Diploma , Pharmacy Technician , Canada
- **ID08119603** (F) — 33yrs, 6'4" , Single , Makam , 10 Sevai , Bachelors.. , Software Engineer , Canada
- **ID08119509** (F) — 28yrs, 5'4" , Single , Visaakam , 7 Sevai , Bachelors.. , Secretary , Canada
- **ID08115839** (F) — 30yrs, 5'5" , Single , Visaakam , N/A Sevai , Bachelors.. , Human Resource.. , Canada
- **ID08115124** (F) — 40yrs, 5'2" , Single , Uthiraadam , N/A Seva , Bachelors.. , Pharmacist , New Zealand
- **ID08115839** (F) — 30yrs, 5'5" , Single , Visaakam , N/A Sevai , Bachelors.. , Human Resource.. , Canada
- **ID08120732** (F) — 30yrs, 5'6" , Single , Chithirai , 7 Sevai , Masters Degree , Doctor , Sri Lanka
- **ID08120728** (F) — 40yrs, 5'4" , Widowed , Not Specified , N/A Sevai , High School , Teacher , Canada
- **ID08120727** (F) — 24yrs, 4'5" , Single , Avittam , 3 Sevai , Bachelors.. , Teacher , Sri Lanka
- **ID08120723** (F) — 41yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , House of Nursing , Malaysia
- **ID08120722** (F) — 32yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Nurse , Sri Lanka
- **ID08120721** (F) — 23yrs, 5'2" , Single , Punarpoosam , N/A Sevai , Bachelors.. , Study , Sri Lanka
- **ID08120718** (F) — 29yrs, 5'5" , Single , Chithirai , 10 Sevai , Masters Degree , Assistant.. , Canada
- **ID08121106** (F) — 21yrs, 5'4" , Single , Mrigasheersham , 7 Sevai , High School , Beautify Parlour , Canada
- **ID08121100** (F) — 26yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Account , Sri Lanka
- **ID08121099** (F) — 21yrs, 5'4" , Single , Pooram , 4 Sevai , High School , Cashier , Canada
- **ID08121095** (F) — 30yrs, 5'4" , Divorced , , Sevai , Bachelors.. , Business , India
- **ID08121089** (F) — 24yrs, 5'2" , Single , Uthiraadam , 10 Sevai Masters Degree , Admin , Canada
- **ID08120650** (F) — 50yrs, 5'4" , Seperated , Pooram , N/A Sevai , Postgraduate.. , Social Worker , Canada

## மணமகன்

- **ID08121120** (M) — 32yrs, 5'7" , Single , Aswini , N/A Sevai , Diploma , Tourisum , Sri Lanka
- **ID08121118** (M) — 35yrs, 5'8" , Single , Thiruvonam , 10 Sevai , Masters Degree , Manager Reporting.. , Sri Lanka
- **ID08121097** (M) — 33yrs, 5'6" , Single , Mrigasheersham , 6 Sevai , Bachelors.. , Technician , Canada
- **ID08121094** (M) — 27yrs, 5'7" , Single , Kettai , 11 Sevai , Ph.D , Scientist , Canada
- **ID08121093** (M) — 34yrs, 5'7" , Single , Moolam , N/A Sevai , Bachelors.. , IT Specialist , Canada
- **ID08121092** (M) — 31yrs, 5'4" , Single , Aayilyam , N/A Sevai , High School , Driver , Canada
- **ID08121090** (M) — 39yrs, 5'7" , Divorced , Poosam , N/A Sevai , High School , Warehouse.. , Canada
- **ID08121088** (M) — 35yrs, 5'9" , Single , Pooram , 1 Sevai , Postgraduate.. , Marketing.. , Sri Lanka
- **ID08121079** (M) — 29yrs, 5'6" , Single , Rohini , 4 Sevai , Bachelors.. , Civil Engineer , Canada
- **ID08117127** (M) — 42yrs, 6' , Divorced , Avittam , 1 Sevai , Masters Degree , Auditor , Canada
- **ID08113686** (M) — 45yrs, 5'7" , Single , Pooram , 2 Sevai , Diploma , Staff- Air.. , Canada
- **ID08120639** (M) — 35yrs, 5'6" , Single , Makam , 8 Sevai , Bachelors.. , Own Bussiness , United States
- **ID08120583** (M) — 32yrs, 5'10" , Single , Poorattathi , 9 Sevai , Bachelors.. , Project Engineer , Canada
- **ID08120564** (M) — 33yrs, 5'11" , Single , Hastham , 8 Sevai , Bachelors.. , Website Administrator ,Canada
- **ID08120356** (M) — 30yrs, 6' , Single , Makam , N/A Sevai , Bachelors.. , Engineer Electric , Canada
- **ID08120270** (M) — 34yrs, 5'8" , Single , Thiruvaathirai , 10 Sevai , Bachelors.. , Data Analyst , Canada
- **ID08120144** (M) — 35yrs, 5'9" , Single , Visaakam , 8 Sevai , Diploma , Own Business.. , Canada
- **ID08119698** (M) — 33yrs, 6'4" , Single , Makam , 10 Sevai , Bachelors.. , Software Engineer , Canada
- **ID08120481** (M) — 30yrs, 5'7" , Single , Poorattathi , 7 Sevai , Bachelors.. , Research Associate , Canada
- **ID08116778** (M) — 37yrs, 5'9" , Single , Uthiram , 12 Sevai , Bachelors.. , Manager Financial.. , Canada
- **ID08116404** (M) — 43yrs, 5'4" , Single , Makam , N/A Sevai , High School , Business , Sri Lanka
- **ID08115828** (M) — 31yrs, 5'9" , Single , Mrigasheersham , 10 Sevai , Bachelors.. , Trading Associate , Canada
- **ID08111978** (M) — 45yrs, 5'5" , Single , Anusham , 2 Sevai , High School , Magna INC , Canada
- **ID08120734** (M) — 35yrs, 5'7" , Seperated , Not Specified , N/A Sevai , Masters Degree , Fama prodecsoen.. , Sri Lanka
- **ID08121105** (M) — 34yrs, 5'6" , Single , Uthiraadam , N/A Sevai , Masters Degree , Engineer , Canada
- **ID08121104** (M) — 35yrs, 6'5" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Lawyer , Canada
- **ID08121103** (M) — 34yrs, 5'11" , Single , Aayilyam , 11 Sevai , Postgraduate.. , Asst Manager , Canada
- **ID08121102** (M) — 22yrs, 5'5" , Single , Aswini , Sevai , Bachelors.. , Customer Service.. , Sri Lanka
- **ID08121101** (M) — 36yrs, 5'7" , Single , Chathayam/sadayam , N/A Sevai , High School , Driver , Canada
- **ID08121098** (M) — 39yrs, 5'11" , Single , Chathayam/sadayam , N/A Sevai , High School , Transportation .. , Canada

# பட்டதாரிகளின் போராட்டமும் அரசின் பொறுப்பும்

ஆட்சி மாறினாலும் சில காட்சிகள் மாறாது என்பார்கள். அப்படித்தானுள்ளது வேலையற்ற பட்டதாரிகளின் போராட்டமும். முந்திய அரசாங்கங்களின் ஆட்சிக் காலத்திலும் தமக்கு அரசாங்கம் வேலை வழங்க வேண்டும் என்று கேட்டுப் போராடினார்கள். இப்போதைய ஆட்சியின் போதும் போராடுகிறார்கள். இதற்காக 'வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்' என்ற பேரில் ஒரு அமைப்பே உண்டு. அந்தச் சங்கம் தொடர்ந்தும் புதுப்பிக்கப்படுகிறது. அதுவே ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் போராட்டங்களை நடத்துகிறது.

பல்கலைக்கழகத்திலிருந்து பட்டம் பெற்று வரும் ஒவ்வொரு தலைமுறையினரும் அந்தச் சங்கத்தில் இணைகிறார்கள். அதாவது பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது மாணவர் அமைப்பில் செயற்படுகின்றவர்கள், பட்டம் பெற்றவுடன் அப்படியே வந்து வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தில் இணைந்து விடுகிறார்கள். இதனால் இந்தச் சங்கம் தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. தொடர்ந்து உயிர் வாழ்கிறது.

இந்தச் சங்கமே யாழ்ப்பாணத்தில் விளக்கு மாற்றை ஏந்தியும் தெருவைக் கூட்டியும் ஒரு அடையாளப் போராட்டத்தை நடத்தியுள்ளது. முன்பு ஆளுநர் அலுவலகத்தைச் சுற்றி வளைப்பார்கள். அல்லது மாவட்டச் செயலகத்துக்கு முன்னே நின்று ஆர்ப்பாட்டம் செய்வார்கள். இப்பொழுது சற்று வித்தியாசமாகத் தெருவைக் கூட்டியிருக்கிறார்கள். அதாவது தெருக்கூட்டுவதற்கே தமக்கு வழங்கப்பட்ட பட்டம் உள்ளது அல்லது தாம் பெற்றுக் கொண்ட பட்டம் பயன்படுகிறது என்ற விதமாக.

ஆனால் அவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாகவே இந்தத் தெருக்கூட்டும் காட்சி எதிர்விளைவை ஏற்படுத்தியிருக்கிறது. அரசாங்கத் தரப்பிலிருந்து மட்டுமல்ல, சமூக மட்டத்திலிருந்தும் இதற்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. வேலையற்ற நிலையை வெளிப்படுத்துவதற்கும் அதற்காகப் போராடுவற்கும் பல வழிமுறைகள் இருக்கும் போது, தெருக் கூட்டுவதாகக் காட்டுவது அந்தத் தொழிலையும் அதைச் செய்யும் தொழிலாளர்களையும் அவமதிப்பதாகும் என்று பலரும் தமது கண்டனங்களை வெளிப்படுத்தி வருகின்றனர்.

வேண்டுமானால், நகரத்தையோ தெருவையோ சுத்தப்படுத்துவதாக ஒரு முற்போக்குச் சிந்தனையை வெளிப்படுத்தியிருந்தால், அது வரவேற்பைப் பெற்றிருக்கும். மதிப்பைக் கூட்டியிருக்கும். அந்தக் கவனம் போராட்டத்துக்கு வலுச் சேர்ப்பதாக அமைந்திருக்கும். அப்படியெல்லாம் நடக்காமல் ஆவேசத்தைக் காட்ட முற்பட்டு மூக்குடைபட்டிருக்கிறார்கள், பட்டதாரிகள்.

ஆக, மக்களின் ஆதரவையும் இழந்த நிலையிலிருக்கும் இந்தப் போராட்டத்தின் அடுத்த கட்டம் என்ன? அதாவது இவர்களுடைய அடுத்த கட்டம் என்ன என்ற கேள்வி எழுந்துள்ளது. அதுவும் புதிய அரசாங்கம் இந்த விடயங்களை (வேலையில்லாப் பட்டதாரிகளை) என்ன செய்யப்போகிறது? அதனுடைய கொள்கை வகுப்பில் இதற்கான தீர்வு என்ன? என்ற கேள்விகள் எழுகின்றன.

வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு அரச நிறுவனங்களில் பணி வழங்குதலே இதுவரையான நடைமுறையாக இருந்துள்ளது. குறிப்பாக அந்தந்தக் காலத்தில் ஆட்சியிலிருக்கும் அரசியற் தரப்பினர் தமது அரசியற் தேவைகளோடு இணைந்ததாக இந்தப் பணிச் சேர்ப்பைச் செய்துள்ளனர். ஏறக்குறைய அரசியல் நியமனங்களாக. இதனால், பணியில் சேர்ந்தவர்கள் அந்தந்த அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களைப் போலச் செயற்பட வேண்டிய நிர்ப்பந்தமும் உருவாகியிருந்தது.



அத்தோடு ஆட்சியைப் பிடிப்பதற்காக வேலைவாய்ப்புகளை வழங்குவோம் என்று வழங்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு அமைய பணிச் சேர்ப்பைச் செய்ததால், அரச நிறுவனங்களில் தேவைக்கு அதிகமானவர்கள் குவிந்து போயுள்ளனர். மட்டுமல்ல, வேலை கொடுக்க வேண்டும் என்பதற்காகவே புதிய புதிய வேலைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதெல்லாம் அரசாங்கத்துக்கு (மக்களுக்கு) சுமையாகவே இன்று மாறியுள்ளன. நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்கு இதுவும் ஒரு காரணம் என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

இதனால் தான் அரச பணிகளில் உள்ளோரின் தொகையைக் குறைக்க வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் நிபந்தனை விதித்தது. இந்த நிபந்தனை ஏற்புடையதே. இதையும் பட்டதாரிகள் அறிந்திருப்பார்கள். ஏற்கனவே பணியாளர் சுமையினால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் அரசாங்கம் எப்படிப் புதிதாக நியமனங்களை வழங்கும் என்ற தெளிவு அவர்களுக்கு வந்திருக்க வேண்டும். குறைந்த பட்சம் இந்தக் கேள்வி யாவது எழுந்திருக்க வேண்டும்.

எப்படிப் பழைய ஆட்களை தேவைக்கு அதிகமாக இருப்போரை வீட்டுக்கு அனுப்பலாம் அல்லது வேறு வழிகளில் அவர்களை ஈடுபடுத்தலாம் என்று அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கும் போது, எங்களையும் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று பிடிவாதம் செய்தால் என்னதான் செய்ய முடியும்?

இங்கேதான் நாம் படிப்பைப் பற்றியும் பட்டத்தைப் பற்றியும் கல்விச் சமூகத்தைப் பற்றியும் கேள்வி எழுப்ப வேண்டியுள்ளது. கல்வி என்பதும் உயர் கற்கை என்பதும் மனித அறிவையும் ஆற்றலையும் விருத்தி செய்வதற்கான ஒரு பொறிமுறையும் ஏற்பாடுமேயாகும். குறிப்பாகச் சுயாதீனத்தை உருவாக்க வேண்டும்.

ஆனால், கவலைக்குரிய விடயமாக இருப்பது, படிக்காதவர்கள் சுயாதீனமாக இயங்குகின்ற அளவுக்குப் படித்தவர்களிற் பலரும் இயங்க முடியாமல் சார்ந்திருக்கவும் தங்கி வாழவும் முற்படுவதாகும். அந்தளவுக்குத் தான் இவர்களுடைய அறிவுத் திறனும் ஆளுமை விருத்தியும் குறைந்து நலிந்து போயுள்ளது.

மட்டுமல்ல, பலர் வேலையில்லாமலே உள்ளனர். ஒரு பக்கம் வேலையில்லாப் பட்டதாரிகள் என்றால், இன்னொரு பக்கம் வேலையில்லாப் பணியாளர்கள் என்ற நிலையே காணப்படுகிறது. வெளிக்கள உத்தியோகத்தர்கள் என்ற பேரில் நியமிக்கப்பட்டோரில் பலரும் உரிய வேலைகளைச் செய்வதுமில்லை. பணியிடங்களில் இருப்பதுமில்லை. அவர்கள் அரசாங்கத்தின் (மக்களின்) சம்பளத்தில் தங்களுடைய தனிப்பட்ட வேலைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இதுபோலப் பல பணிகளில் நியமிக்கப்பட்டவர்கள் பணிப் போதாமையினால் வேலையற்ற நிலையில் – சும்மா – இருக்கிறார்கள்.

இதேவேளை பல பணிகளுக்கு ஆட்களே போதாமலுள்ளது. குறிப்பாக தாதிய உத்தியோகத்தர்கள், மருத்துவர்கள், சில பாடங்களுக்கான ஆசிரியர்கள், கிராம அலுவலர்கள் போன்ற பணிகளில். இதனால் மக்களும் மாணவர்களும் பாதிக்கப்படுகின்றனர். அதே நேரம் பல பணிமனைகளில் தேவைக்கு அதிகமான பணியாளர்கள் உள்ளனர். இதற்குக் காரணம், பணிச் சேர்ப்பில் காணப்படுகின்ற குறைபாடுகளாகும். எந்தெந்தப் பணிகளுக்கு எவ்வளவு பேர் தேவை என்ற மதிப்பீட்டைச் செய்து, அதற்கேற்ப பணிச் சேர்ப்பைச் செய்தால் இந்தக் குறைபாடும் பிரச்சினையும் நேராது.

அதற்குப் பொருத்தமான கல்வித் தகமை, துறைசார் படிப்பு போன்றவை அவசியமாகும். அதற்கமைய பாடசாலை மட்டத்திலிருந்தே மாணவர்களை வழிப்படுத்தவும் அறிவுட்டவும் வேண்டும். அதற்கு முன் பெற்றோருக்கு விழிப்புணர்வுட்டப்படுவது அவசியமாகும்.

படிப்பு அல்லது கற்கை என்பதும் அறிவுட்டல் என்பதும் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட வாழ்க்கையின் வளர்ச்சியோடு, சமூக அபிவிருத்தியையும் அதன் மூலமாகத் தேச வளச்சியையும் நிறைவு செய்வதற்கானதாக அமைய வேண்டும். அதற்கான பொறிமுறைகளை உருவாக்குவதே சிறந்த கல்விக் கொள்கையும் பொருளாதாரக் கொள்கையுமாகும். இரண்டும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை.

ஆனால் எமது நாட்டில் துரதிருஷ்டவசமாக அப்படியான நிலை இல்லை. இங்கே பல பாடசாலைகளிலும் மாணவர்கள் மீது விருப்பத்துக்கு அப்பாலான – தேவைக்கு வெளியேயான பாடங்கள் திணிக்கப்படுகின்றன.

இலவச பல்கலை கழக அனுமதியின் போது இவர்களுக்கு வேலை பற்றி உறுதிப்பாடு வழங்கப்படவில்லை.. பட்டதாரிக்கு அரசவேலை எனும் நியமம் இலங்கையில் இல்லை இவர்கள் சமூகத்தைப்பற்றி படிக்க இன்னும் நிறையவே உண்டு. இவர்களுக்கு உத்தியோகம் கிடைத்தால் அடித்தட்டு மக்களை எவ்வாறு நடாத்துவார்கள். உங்கள் சிந்தனையில் நிறையவே மாற்றம் வேண்டும் பட்டதாரிகளே.

அரசாங்கம் எப்போதாவது கூறினார்களா பட்டதாரிகளுக்கு வேலை தருகின்றோம் நிரந்தர நியமங்கள் தருகின்றோம் என்று. வாய்ப்பு கிடைத்தால் மட்டும் போட்டிப்பரீட்சைகளில் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு என்று தான் அறிவிக்கின்றார்கள். தற்போதைய வங்குரோத்தில் ஓய்வு பெற்றவர்களுக்கே ஓய்வுதியம் கொடுப்பதற்கு திண்டாடுகின்றார்கள். இவ்வாறு திணரும் அரசாங்கம் எவ்வாறு பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பார்கள். அதுவும் எத்தனை ஆயிரம் பேருக்கு கொடுப்பார்கள்.

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
– கருணாகரன் –


ஏற்கெனவே சகல மாகாணங்களிலும் அதிகளவு உத்தியோகத்தர்கள் மேலதிகமாக கடைமையாற்றுவதாக அரச ஊடகங்களில் கூடியிருந்தார்கள். அப்படியென்றால் தற்போது கடமையாற்றும் உத்தியோகத்தர்களை 55 வயதுடன் வீட்டுக்கு அனுப்பினால் தான் புதிய நியமனங்களை எதிர்பார்க்கலாம்.

இவர்களைப் பொறுப்புடையோராக, சமூக நிலவரத்தைப் புரியக் கூடியோராக, திறனாளராக, சுயாதீனமுடையோராக மாற்றுவதற்கு அரசும் கல்வி நிறுவனங்களும் தவறியுள்ளன. என்பதால் தான் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்காத, முகம் கொடுக்க முடியாதவர்களாக ஒரு சமூகம் உருவாகியிருக்கிறது.

இது தன்னைத் தப்ப வைக்கவே விரும்புகிறது. இதனால்தான் பலரும் நாட்டைவிட்டுத் தப்பியோடுவோராக மாறியுள்ளனர். பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத நாட்டினராக, சமூகத்தினராக, மனிதர்களாக, இலங்கையர்களை உருவாக்கியுள்ளது.

இந்தப் போக்கும் பண்பும் ஒரு நாட்டுக்கு நல்லதல்ல. உண்மையில், நாடோ, வீடோ நெருக்கடிக்குள்ளானால், அதை மீட்பதற்கு அதனுடைய புதல்வரும் புதல்வியரும் முன் வர வேண்டும். வீட்டை விட்டும் நாட்டை விட்டும் தப்பியோடுவதல்ல. திரைகடலோடித் திரவியம் தேடலாம் தான். அப்படியானால் அவ்வாறு தேடித் திரட்டிய திரவியத்தோடு அவர்கள் நாட்டுக்கும் வீட்டுக்கும் திரும்ப வேண்டும். அப்படித் தான் பிற நாடுகளில் நடந்துள்ளன.

இரண்டாம் உலகப்போரில் அழிவைச் சந்தித்த யப்பான் பெரும் நெருக்கடியைச் சந்தித்தது. அதற்காக யப்பானிய மக்கள் நாட்டை விட்டுத் தப்பியோட முற்படவில்லை. தேசமாகத் திரண்டு நாட்டைக் கட்டியெழுப்பினர். இப்படிப் பல சமூகங்கள் வரலாற்றில் உள்ளன. ஆனால் இலங்கையிலோ நிலைமை வேறு. இங்கே அரசாங்கமே மக்களைத் தப்பியோடத் தூண்டியது. கடந்த ரணில் விக்கிரசிங்கவின் ஆட்சியில் இது பகிரங்கமாகவே நடந்தது.

ஆக ஒரு பக்கம் நாட்டை விட்டுத் தப்பியோடுவோரையும் படித்தவர்களுக்கு அரசாங்கமே வேலை வழங்க வேண்டுமெனச் சிந்திப்போரையுமே நாடு உருவாக்கியுள்ளது.

அதாவது நாட்டை மீட்போருக்குப் பதிலாக, அதை மூழ்கடிப்போராக. மாற்றங்களை உருவாக்க விரும்பும் அரசாங்கம் இதை மனதில் கொள்வது அவசியம்.

மக்களைப் பாதுகாப்பதென்பது, அவர்களைச் சரியான திசையில் வழிநடாத்துவதேயாகும். அதுவே வேண்டிய மாற்றம். அதுவே தேவையான பணி. அதுவே விடுதலைக்கான, நெரிக்கடியிலிருந்து தீர்வுக்கான வழி



# மாண்புறு மைந்தன்

மலைவளமும் மண்வளமும் நீர் வளமும் மிகுந்து, நீலத்திரைக்கடல் சூழ் தித்திக்கும் தேன் நாடாம் ஈழவள திருநாட்டின் வடபால் காலைக்கதிர வன் மேலைப் புவியில் பனித்துளி போக்கும் விடியலில், நீலக்கடலோரம் நெடுந்தூரம் தான்சென்று, சேலும் கயலும் செவ்விளைமீனும் கொணரும் வங்கம் மலிகின்ற கடலோர காக்கை தீவு

ஒருபுறமும், வெய்யா வினை தீர்க்கும் வேலவனாம் அந்திரான் முருகமூர்த்தி யும் சீர்பெறு சிந்தாமணிப்பிள்ளை யாரோடு களவுடை அம்மனும் பத்திர காளியும் அருளாட்சி புரிய, எல்லைக் காவலனாய் கல்லுண்டாய் வயிரவரும் கூடவே காத்தவராயரும் கோலோச்சி நிற்க சேற்றிதழ் கமலங்கள் மலரும் தண்வயல் சூழ் மூத்த விநாயகர் முன்னிற்க,

சித்திரைப் புத்தாண்டில் சித்திர தேரேறி பவனிவரும் மருதடி விநாயகர் அரு கிருக்க, சின்னஞ்சிறு குன்றுகள் நடுவே நாணிக்குனியும் நங்கையர் போல் நிறைவிளை நெற்கதிர் நிரம்பி வழியும் வயற்புலத்தின் மத்தியில், அகிலாண்ட நாயகன் அப்பன் சிவனார் கொலு விருந்து சிஷ்ட பரிபாலனம் செய்ய, கலையழகுமிகு கவின்தரு மணி மண்டபம் காண்போரை வியக்க வைக்க,

பிள்ளைத்தமிழ்கவி தங்கத் தாத்தா சோமசுந்தரபுலவனாரை தரணிக்கே தந்ததும், மேடை நாடகத்தின் தந்தை யாம் கலையரசு சொர்ணலிங்கத்தை அவனிக்கே அளித்ததும், ஆறில்லா ஊருக்கு அழகு பாழ் ஆதலின் பெயரு க்காய் காய்ந்தும் அவ்வப்போது கசிந்தும் ஓடும் வழுக்கையாற்றினைத் தன்னகத்தே கொண்டதும் ஆன்றோ ரும் சான்றோரும் வியந்து போற்றிடும் நவாலியூரிலே, ஸ்ரீமான் கந்தையாவிற் கும் பசுபதிஅம்மாவிற்கும் சிரேஷ்ட புத்திரனாக 1948 ஆம் ஆண்டு கார்த்தி கைத் திங்கள் அவனியிற் பிறந்தார். தாம் பெற்றெடுத்த தலைமகனுக்கு கணேசமூர்த்தி என்னும் திருநாமம் சூட்டி மகிழ்ந்தனர் பெற்றோர்.

அன்புத் தம்பியர் மூவரோடு ஆசைத் தங்கையுமாய் ஐவராயினர். அன்னை யின் அரவணைப்பிலும் தந்தையின் வழி காட்டலிலும் தனது ஆரம்பக் கல்வியை ஆர்வத்துடன் கற்றார். விளையும் பயிரை முளையிற் தெரியு மாதலின், சின்னஞ்சிறு வயதினிலே தமிழ்மொழிப்பற்றும், இறைபக்தியும் நிரம்பியவராகக் காணப்பட்டார். அன் னாரின் கல்வியை மேலும் வளம்படுத்த, மானிப்பாயில் கல்விக `கூடங்களின் மணி முடியாகத் திகழ்ந்த மானிப்பாய் இந்துக்கல்லூரியில் மாணாக்கனாகச் சேர்த்தனர். அங்கு ஏட்டுக்கல்வியில் மட்டுமன்றி கலை கலாச்சார நிகழ்வு களிலும் ஐக்கிய மாணவர் சங்கத்தின் விவாத மேடைகளிலும் ஆர்வத்துடன் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.

நாட்களும் நகர தமது கல்லூரிப் படிப்பினை நிறைவு செய்தபின்னான வேலைதேடும் முயற்சியின் விளைவாக புகையிரதத்திணைக்களத்தில் லிகிதராக இணைந்து கொண்டார். கடமையே கண்ணாயிருந்த அவர் புகையிரத நிலைய அதிபர் பதவிக்கு தரம் உயர்த் தப்பட்டார். காலமும் கனிய பெற்றோ ரின் விருப்புக்கமைய இல்லறவாழ்வில் அடியெடுக்க விரும்பி, புனிதவதி என்னும் குணவதியைக் குலம் காக்க கரம்பற்றினார். சிறு வயதிலே அன் னையை இழந்த பொழுது மூத்தவ னாயிருந்து சகோதரர்களை அரவ ணைத்து, நண்பனாய் காவலனாய் நல்லாசானாய் பண்பிலே சிறந்த அண்ணனாய் வளர்த்து ஆளாக்கிய பெருமைக்குரியவர்.

தனது பள்ளிப்பருவம் தொட்டே சமூகநல சேவைகளில் தன்னார்வம் கொண்ட அன்னார் குலதெய்வமான ஆனைக்கோட்டை சம்பந்தப் பிள்ளை யார் ஆலயத்தை புனரமைக்க விரும்பி மேடை நாடகங்கள் மற்றும் கலை கலாச்சார நிகழ்வுகள் மூலம் நிதி சேகரித்து ஆலயத் திருப்பணிக்கு உதவி புரிந்தார்.

காரியாலய கடமையின் நிமித்தம் கொழும்பு திருகோணமலை, யாழ்ப் பாணம், வவுனியா போன்ற இடங்களில் கருமமாற்றும்பொழுது, போர்க்கால இடர்பாடுகளினால் நலிவடைந்திருந்த வவுனியா இந்து மாமன்றத்திற்கு புத்துயிரளித்து திறம்பட செயற்பட வைத்தார். ஈழ வரலாற்றின் இருண்ட யுகமான போர்க்கால சூழ்நிலையில் இனங்களுக்கிடையிலான முரண்பாடு கள் உச்சக் கட்டத்தை அடைந்தி ருந்த காலகட்டத்தில் சமூகங்களுக் கிடையில் சமூக நிலையை மேம் படுத்துவதில் முன்னின்று உழைத்தார். அன்னாரின் சமூகநல ஆர்வத்தினையும் அதற்கான அர்ப்பணிப்பையும் இனங் கண்ட இலங்கை அரசாங்கம் அன் னாரை அகில இலங்கை சமாதான நீதிவானாக (Justice of Peace for all Island) நியமித்து கௌரவித்தது. அவரது சகோதரர்கள் மேற்கத்தைய நாடுகளுக்கு புலம் பெயர்ந்த பொழு திலும் மகன் தந்தைக்கு ஆற்ற வேண்டிய கடமைகளை நிறைவேற் றும் பொருட்டு தனது ஓய்வுகாலத்தை தந்தையுடனேயே தாயகத்தில் செல விட்டார்.

தமிழ் மக்களின் விடியலைத் தேடிய விடுதலைப் போராட்டத்தின் எதிர் விழைவாக அழித்தொழிக்கப்பட்ட ஆலயங்கள் பல. அதற்கு மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயமும் விதி விலக்கல்ல. அதன் புனருத்தாபனம் நடைபெற்றுக் கொண்டிருந்த கால கட்டத்தில் அறங்காவலர்கள் மத்தியில் நிலவிய அதிகார போட்டியினால் நிர்வாகம் தடம்புரண்ட பொழுது ஆலயத்தின் உள்ளக நிர்வாக முகாமை த்துவத்தை பொறுப்பேற்று சகல தரப்பினரையும் ஒருங்கிணைத்து கட்டுக்கோப்புடன் கண்ணியமாக திருப்பணிகளை முன்னெடுத்து குட முழுக்கு காண வைத்து அக மிக மகிழ்ந்தார்.

அடுத்து தன்னை இச் சமூகத்தின் சேவகனாக உருவாக்கிய கல்லூரித் தாயின் தேவைகளை பூர்த்தி செய்ய விரும்பி கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தில் இணைந்து பல வருடங்கள் செயலாளராக, தலைவராக பதவி வகித்து சங்கத்தின் பணிகளை மிகுந்த உத்வேகத்துடன் முன்னெடுத்துச் சென்றார். கல்லூரியின் நூலகத்தை தனது சுய முயற்சியினால் நண்பர்கள், உறவினர்களின் பங்களிப்புடன் புனர மைத்து மெருகூட்டிய கர்ம வீரனா வார். அன்னார் மானிப்பாய் மண்ணி ற்கும் கல்லூரிகளின் வளர்ச்சிக்கும் ஆற்றிய பணியையும் அர்ப்பணிப்பை யும் பாராட்டும் முகமாக இந்துக் கல்லூரியினால் நடாத்தப்பட்ட பொன் மாலைப் பொழுது` கலை கலாச்சாரப் பெருவிழாவின் போது பொன்னாடை போர்த்தி பரிசுகள் வழங்கி கௌரவிக் கப்பட்டார்.

காலங்கள் கரை புரண்டோட கூடவே மூப்பும் பிணியும் தொடர ஓய்வு நிலைக்குத் தள்ளப்பட்டு சோபகிருது வருடம் தை மாதம் பூர்வ பஞ்சமி திதியில் (January 15. 2024) இறைபதம் ஏகினார்.

ஒரு மனிதன் எவ்வாறு சமூகத்தில் வாழ்ந்தான் என்பதை அவனது இறுதி நாட்கள் எடுத்தியம்பும் என்பது நம் மக்கள் மத்தியில் நிலவும் வழக்கு மொழியாகும். அன்னாரின் மரணச் செய்தியறிந்த சிலரின் கருத்துக்கள் அன்னாரின் வாழ்க்கைக்கு கட்டியம் கூறி நிற்கின்றன.

"The bond Mr. Ganeshamoorthy shared as brothers is truly special and we can only imagine the profound

loss everyone must be feeling. His dedication to our College and its alumni community was humongous.

His contribution will undoubtedly be remembered and cherished by all who had the privilege of knowing him."

S.Sudareswaran. President. MHC & MLC OSA Canada

`பழைய மாணவர் சங்கத்தில் பல பதவிகள் வகித்து கல்லூரியின் வளர்ச்சி க்காக தன்னை அர்ப்பணித்த மானிப் பாய் இந்துக் கல்லூரியின் மாண்புறு மைந்தன். தன்னலமற்ற சமூக சேவை யாளர். அறவழி நின்று மக்களுக்கோர் கலங்கரை விளக்காய் வழிகாட்டி நின்ற பண்புடையாளன். ஏகினன் மருதடி யான் பதம் நாடியே.`

மானிப்பாய் மருதடி விநாயகர் வழிபடுவோர் சங்கம்.

மண்ணிற் பிறந்தார் பெறும் பயன் தம்மக்கள் கண்ணினால் அவர் தம் நல் விழாப்பொலிவு கண்டார்தல் ஆதலின் அவ்வழி நின்று அன்னார் மானிப்பாய் மண்ணிற்கும் மக்களுக்கும் ஆற்றிய சேவைகள் மண்ணும் விண்ணும் நிலைத்து நிற்கும் வரை மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**- நவாலியூரான்-**





# எக்னாலிகொட - எருமைத்தீவு காளியும் கண்ணகியும்

– அழகு குணசீலன் –

முள்ளிவாய்க்கால் முடிந்து முதல் பொங்கல், பத்து நாட்களை கடந்து இருந்தது. வழமை போல் தமிழ்த் தேசிய தலைமை சம்பந்தர் பொங்கல் பிரகடனம் செய்திருந்தார். தை பிறந்தால் வழி பிறக்கும் என்று ஜனாதிபதி தேர்தலில் போர்த்தளபதி சரத் பொன்சேகாவை தமிழ் மக்களை ஆதரிக்க கோரும் தமிழ்த்தேசிய வரலாற்றுக்கு தார் பூசிய முட்டாள் தனமான முடிவை தமிழ்த்தேசிய பாராளுமன்ற அரசியல் எடுத்திருந்தது.

இந்தச் சூழலில் இலங்கையின் பிரபல அரசியல் பத்தி எழுத்தாளரும், கேலிச் சித்திர வரைஞருமான பிரகீத் எக்னாலிக்கொட காணாமல் போனார். இது நடந்தது 24.01.2010 இல். அன்று காலை வேலைக்கு போனவர் மாலையில் வீட்டுக்கு திரும்பி வரவில்லை. இரு நாட்கள் கழித்து 26.01.2010இல் ஜனாதிபதி தேர்தல் நடைபெற இருக்கையில் இது நடந்தது. இது நடந்து இன்று சரியாக பதினைந்து ஆண்டுகள் பறந்து விட்டது. காணாமல் ஆக்கப்பட்ட போது பிரகீர்த்க்கு வயது 50.

கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட பிரகீத் கடத்தப்படுவதற்கு சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி தேர்தல் குறித்து அலசும் ஒரு கட்டுரையை எழுதியிருந்தார். அந்தக் கட்டுரை தேர்தலில் இராணுவத்தளபதி சரத்பொன் சேகாவுக்கு சாதகமாக இருந்ததாக கூறப்படுகிறது. அதுவே அவரின் கடத்தலுக்கும் காரணமாக சந்தேகிக்கப்படுகிறது.

அப்போது இறுதிப் போரில் வெற்றி பெற்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பதவியில் இருந்தார். ஜனாதிபதியும், இராணுவத்தளபதியும் போர் வெற்றிக்கு யார் காரணம் என்று உரிமை கோரி மக்களிடம் அங்கீகாரம் கோரிய தேர்தல் இது. இறுதிப்போரை இன அழிப்பு என்று கூறிய தமிழ்த்தேசியம், அதன் முக்கிய பங்காளிகளுள் ஒருவரான சரத் பொன்சேகாவை ஆதரித்தது.

பிரகீத் சந்தியா தம்பதிகளின் இரு மகன்கள் அரசியல் அகதிகளாக சுவிஸில் வாழ்கிறார்கள். இளையவன் ஹரீத். மூத்தவன் சஞ்ஜயா. ஊடகம் ஒன்றுக்கு தகப்பன் பிரகீர்த் குறித்த நினைவுகளை அவர்கள் வழங்கியிருந்தார்கள் . அவற்றில் சில வரிகள்.!

ஹரீத்: அவர் காணாமல் போன நாள் என் நினைவில் நிலைத்து நிற்கிறது. நான் நித்திரையில் இருந்து விழித்த போது வீடு நிறைய ஊடகவியலாளர்கள். என்ன நடந்தது என்பதை நான் அறிந்திருக்கவில்லை. அம்மா சொன்னார் அப்பாவை காணவில்லை என்று.

அப்போது எனக்கு வயது 12. இதன் தாக்கங்களை முழுமையாக என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. எனக்கு ஒரு ஸ்காட் போட்– 'SKATE BORD' வேண்டும் என்ற விருப்பத்தை அவருக்கு சொல்லியிருந்தேன். அதற்கான பணத்தை சேமிப்பதற்காக வீட்டில் இருந்து அலுவலகத்திற்கு நடந்தும் சென்றிருக்கிறார். இத்தனைக்கும் அவரின் காலில் சத்திர சிகிச்சையும் செய்யப்பட்டிருந்தது.

சஞ்ஜயா: எனக்கு அப்போது 15 வயது. அது தான் அப்பாவையும், அம்மாவையும் நான் ஒன்றாக பார்த்த கடைசிக் காட்சி. அன்று அவர் வீட்டை விட்டு போகும் போது எனது ரீ சேர்ட்டை அணிந்திருந்தார். அவர் இரவு வீட்டுக்கு வராததால், அம்மா முழு இரவும் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயற்சித்தார். தொடர்பு கிடைக்கவில்லை. நண்பர்கள், உறவினர்களை விசாரித்தார் பலன் இல்லை. அவருடைய கட்டுரைகளை எனக்கும் வாசித்து காட்டுவார். வீட்டுக்கு வரும் நண்பர்கள், உறவினர்களுடன் அவர் விவாதிக்கும் போது நானும் உடன் இருந்திருக்கிறேன்.....

பிரகீத் காணாமல் போனது தொடர்பாக அவரது மனைவி பொலிஸில் முறையிட்டபோது இன்றைய நிலையில் இது சர்வசாதாரணம்" இப்படி கூறியது பொலிஸ். அவர் கடத்தப்படுவதற்கு சில தினங்களுக்கு முன்னர் தன்னை சிலர் பின்தொடர்வதாக உணர்வதாகவும், கண்காணிக்கப்படுவதாகவும் தனது நண்பர்களுக்கு பிரகீத் சொல்லியிருக்கிறார்.

2012இல் இந்த வழக்கு பல்பக்க அழுத்தங்களால் முடுக்கி விடப்பட்ட போதும் தரவுகளின் போதாமை என்று கூறி தொடரப்படவில்லை.

2019இல் நல்லாட்சியில் விசாரணைகள் மீள் ஆரம்பிக்கப்பட்ட போதும், சந்தேக நபர்களான இராணுவத்தினர் கைது செய்யப்பட்டும், அவர்கள் அனைவரும் விரைவில் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பின் தகவல்களின்படி இதுவரை உலகில் சுமார் 100 ஊடகவியலாளர்கள் காணாமல் போயுள்ளனர். இதில் அரை வாசிப் பேரின் கடத்தலுக்கும், காணாமல் போதலுக்கும் அரசாங்கங்களே பொறுப்பு என்று அறிக்கையிடப்பட்டுள்ளது. இலங்கையில் கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் தொகை இத்தொகையை நெருங்குகிறது.

அண்மையில் கடற்படையை சேர்ந்த ஒருவர் கடத்தப்பட்ட பிரகீத் எக்னாலிகொட கடத்தப்பட்ட பின்னர் கொலை செய்யப்பட்டு மட்டக்களப்பு எருமைத்தீவில் அவரது சடலம் வீசப்பட்டதாக கூறியிருந்தார். மட்டக்களப்பிலும் பலர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களின் உடல்களும் எருமைத்தீவில் புதைக்கப்பட்டு அல்லது வீசப்பட்டு இருக்கக்கூடும் என சந்தேகங்கள் எழுந்துள்ளன.

குறிப்பிட்ட கடற்படைவீரரின் கருத்தின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொள்வது மட்டுமன்றி எருமைத் தீவிலும் புதைகுழிகளும், வேறு மனித எலும்புக்கூடுகளும் உண்டா? என்பதை ஆராய்ந்து பொறுப்புக் கூற வேண்டிய பொறுப்பை– கட்டாயத்தை அரசாங்கம் தட்டிக்கழிக்க கூடாது. எருமைத்தீவும் 'கிளீன்' செய்யப்பட வேண்டாமா.....?

பிரகீத்தின் மனைவி, சந்தியா பிரகீத் இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக குரல்கொடுக்கும் மனித உரிமைகள் செயற்பாட்டாளராக செயற்படுகிறார். அவருக்கு அழுத்தம் கொடுக்கும் முகமாக ஹரீத், சஞ்சயா இருவரையும் கண்காணித்ததையும், அரசாங்கம் கடத்த திட்டமிட்டதையும் அறிந்தே இருவரும் தப்பித்து சுவிஸில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர்.

இது தனது தாயின் போராட்டங்களுக்கு வலுச்சேர்க்கும் என்று அவர்கள் நம்புகின்றனர்.

ஆட்சியாளர்களிடம் இருந்து தங்கள் குடும்பத்திற்கு நீதி கிடைக்குமா? என்ற கேள்விக்கு அவர்கள் இன்றைய ஆட்சியிலும் நம்பிக்கை கொண்டவர்களாக இல்லை. அன்றைய சட்டமா அதிபர் மோகன் பீரிஸ் ஐ.நா. சித்திரவதைகளுக்கு எதிரான குழுவில் தோன்றி சாட்சியமளித்தார். அதில் பிரகீத் வெளிநாட்டுக்கு தப்பிச்சென்று வாழ்கிறார் என்று கூறியிருந்தார். பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பிரகீத் பிரான்ஸில் இருக்கிறார் என்றும் தனக்கு தெரிந்த நண்பர் ஒருவருடன் அவர் காணப்பட்டார் என்றும் கூறியிருந்தார்.

இந்த அரச தரப்புக் கருத்துக்கள் பற்றியும் குறிப்பிட்ட பத்திரிகை அவர்களிடம் கேள்வி எழுப்பியது. இவை அரசாங்கத்தின் பொய்யான கண்டுபிடிப்புகள். இலங்கை ஊடகங்களினதும், அரசாங்கத்தினதும் பொய்களுக்கு நாங்கள் பழக்கப்பட்டு விட்டோம் என்கிறார்கள் அவர்கள்.

உங்கள் தந்தை இன்னும் உயிரோடு இருக்கிறார் என்று நம்புகிறீர்களா?

இல்லை, கடத்தப்பட்டு மறுநாளே அவர் கொலைசெய்யப்பட்டுவிட்டார். அவரைக் கண்டு பிடிக்க முடியாமல் போனது உங்களுக்கு பெரும் மனத் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் அல்லவா? சடலத்தை கண்டு பிடிப்பது இனியும் எங்களுக்கு முக்கியம் இல்லை. எங்களுக்கு நீதி வேண்டும். குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்பட்டு நீதி மன்றத்தில் நிறுத்தப்படவேண்டும் அதுவே எங்களுக்கு முக்கியம் என்கிறார்கள் பிரகீத்தின் பிள்ளைகள்.


தங்கள் தாய் தென்னிலங்கையில் மட்டும் அன்றி வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுடன் இணைந்தும் இந்த அநீதிக்கு எதிராக போராடுகிறார் என்று கூறும் அவர்கள் காளி, கண்ணகி தெய்வங்கள் மீதான நம்பிக்கையால் நேர்த்தி வைத்து நீதி கேட்கிறார் என்றும் அந்த நேர்காணலில் கூறியிருக்கிறார்கள்.

அவர்களின் நேர்காணலை படித்த போது கண்ணகி –கோவலன் கதை மனதில் தோன்றியது. பாண்டிய மன்னன் தவறான முடிவை எடுத்து கோவலனை கொன்றபோது கண்ணகி அதற்கு நீதிகேட்டு போராடினாள். மன்னனும், மனைவி கோப்பெருந்தேவியும் மாண்டு போனார்கள் என்கிறது சிலப்பதிகாரம்.


இலங்கையில் அரசியல் பிழைத்தமைக்காக ஆகக் குறைந்தது மக்களிடம் மன்னிப்பு கேட்ட அரசர்கள் – அரசிகள் உண்டா ? எத்தனை பேர்?

இன்றைய அநுர ஆட்சி கண்ணகிகளுக்கு வழங்கப் போகின்ற நீதி என்ன?

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?





மேடராசி அன்பர்களே! காரியங்களில் தாமதம் உண்டாகும். உடற்சோர்வு மன சோர்வு வரலாம். மிகவும் வேண்டியவரை பிரிய நேரிடும். கண்மூடித்தனமாக எதையும் செய்யாமல் யோசித்து செய்வது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் அதிகரிக்கும். லாபம் அதிகமாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலை பளு அதிகரிக்கும். தாய், தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.





ரிஷபராசி அன்பர்களே! வீண் பகை உண்டாகலாம். நண்பர்களிடம் இருந்து பிரிய வேண்டி இருக்கும். கவுரவ பங்கம் ஏற்படாமல் கவனமாக செயல்படுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் தேவையற்ற இடர்பாடுகள் அகலும். பார்ட்னர்களை அனுசரித்து செல்வது நல்லது. கடன் கொடுக்கும் போதும் வாங்கும் போதும் கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு குறிக்கோளற்ற வீண் அலைச்சல், இருக்கும்





மிதுனராசி அன்பர்களே! அதி முக்கிய காரியங்கள் சுபமாக நடக்கும். மனோதிடம் அதிகரிக்கும். பயன் தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள். செல்வம் சேரும். வாகனம் வாங்க எடுத்த முயற்சி கைகூடும். பயணங்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். வீடு மனை சார்ந்த வழக்குகளில் ஆதாயம் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் நீங்கி முன்னேற்றம் உண்டாகும். லாபம் அதிகரிக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும்.




கடகராசி அன்பர்களே! தன்னம்பிக்கை அதிகரிக்கும். அறிவுத் திறன் அதிகரிக்கும். பெயரும், புகழும் கூடும். தொழில் வியாபாரம் வளர்ச்சி பெறும். இதுவரை இருந்த தொய்வு நீங்கும். லாபம் அதிகரிக்கும். இனிமையான பேச்சின் மூலம் வாடிக்கையாளர்களை தக்க வைத்துக் கொள்வீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவி தேடிவரும். வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும். பணி வெளியூர் செல்ல வேண்டி இருக்கலாம்





சிம்மராசி அன்பர்களே! பல வகையிலும் நற்பலன்கள் தேடி வரும். தெய்வபக்தி அதிகரிக்கும். பயணங்கள் மகிழ்ச்சி தரும். மனதில் சுய நம்பிக்கை அதிகரிக்கும். வாக்கு கொடுக்கும் முன் பார்த்து கொடுக்கவும். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராமல் ஏற்பட்ட சிக்கல்கள் தீரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதல் பணி சுமையை ஏற்க வேண்டி இருக்கும். பயண செலவு உண்டாகலாம்.




கன்னிராசி அன்பர்களே! எடுத்த முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். உடல் ஆரோக்கியம் உண்டாகும். எதிர்பாலினத்தாரால் நன்மை உண்டாகும். திட்டமிடாத செயல்களால் வீண் செலவு உண்டாகும். வீட்டை விட்டு வெளியில் தங்க நேரிடும். தொழில் வியாபாரம் தொடர்பான முக்கிய முடிவுகள் எடுப்பதில் தடுமாற்றம் உண்டாகும். லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் நீண்ட நேரம் பணியாற்ற வேண்டி இருக்கும்




துலாம்ராசி அன்பர்களே! வீண் வாக்குவாதங்கள் அகலும். எந்த காரியத்தையும் சிறிது முயற்சி செய்தால் வெற்றி பெறலாம். வாகன லாபம் ஏற்படும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறி வேகம் பிடிக்கும். தேங்கி இருந்த சரக்குகள் விற்பனையாகும். லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சிறப்பான பலன் கிடைக்க பெறுவர். புதிய பொறுப்புகள் சேரும். வேலை தேடியவர்களுக்கு வேலை கிடைக்கும்




விருச்சிகராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக இருந்து வந்த காரிய தடைகள் நீங்கும். மனதில் இருந்த குழப்பம் ஏற்பட்டு நீங்கும். வீண் பிரச்சனைகள் நீங்கும். வெளிநாட்டு பயணங்கள் கைகூடும். தொழில் வியாபார சிக்கல்கள் நீங்கி நன்கு நடைபெறும். பங்குதாரர்களுடன் இருந்து வந்த சிக்கல்கள் நீங்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். சிலருக்கு புதிய பதவி கூடுதல் பொறுப்புகள் கிடைக்கலாம்.







தனுசுராசி அன்பர்களே! எல்லா வகையிலும் நன்மை உண்டாகும். மற்றவர்களுக்கு உதவிகள் செய்து மதிப்பு கிடைக்க பெறுவீர்கள். குறிக்கோளற்ற பயணங்கள் உண்டாகும். விழிப்புடன் இருப்பது நல்லது. சுப செலவுகள் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் போட்டிகளை சந்திக்க வேண்டி இருக்கும். பார்ட்னர்களுடன் சுமூகமாக செல்வது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் கடினமான பணிகளை செய்யவேண்டி இருக்கும்..




மகரராசி அன்பர்களே! துணிச்சலான சில முடிவுகளை எடுப்பதன் மூலம் நன்மைகளை தரும் காலகட்டமாக அமையும். மனதில் மகிழ்ச்சியான எண்ணங்கள் வரும். கோபத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் நட்பு, உறவினர்களிடம் சுமூகமான நிலை நீடிக்கும். வாகனங்கள் வாங்குவதில் இருந்த தடை நீங்கும். வழக்குகளில் சுமூக முடிவுகள் வந்து சேரும். தொழிலில் இருந்த குழப்பம் நீங்கி தைரியம் உண்டாகும்.




கும்பராசி அன்பர்களே! திடீர் மனக்கவலை உண்டாகும். எதிர்பாராத செலவு ஏற்படும். முயற்சிகளில் தடை ஏற்படும். உஷ்ண சம்பந்தமான நோய் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் போட்டியை சந்திக்க வேண்டி இருக்கும். வாடிக்கையாளர்களிடம் கடுமையான பேச்சை தவிர்ப்பது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் கவனமாக பணிகளை மேற்கொள்வது நல்லது.




மீனராசி அன்பர்களே! எதிர்ப்புகள் விலகும். எல்லா நன்மைகளும் உண்டாகும். பயணம் மூலம் நன்மை கிடைக்கும். செய்யும் காரியங்களால் பெருமை ஏற்படும். புத்திசாதுரியம் கூடும். வழக்குகளில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். தொழில் வியா பாரத்தில் முன்னேற்றமான நிலை காணப் படும். வியாபார நிமித்தமாக வெளியூர் பயணங்கள் செல்ல வேண்டி இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் திறமையான பேச்சால் வெற்றி பெறுவர்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# என் இனமே! என் சனமே! உன்னை உனக்கு

(15ம் பக்கத் தொடர்ச்சி) அர்ப்பணித்து போர் புரிந்தவர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள்.அல்லது காணாமல் ஆக்கப் பட்டு விட்டார்கள். அல்லது புலம் பெயர்ந்து ஓய்வு பெற்று விட்டார்கள். ஒரு சமூகத்துக்காகத் தம்மை அர்ப்பணித்து உழைப்பவர்கள் தான் அந்த சமூகத்தை ஒரு தேசமாகத் திரட்டலாம். அப்படிப்பட்டவர்களின் தொகை குறைந்து விட்டது. எல்லாவற்றையும் தொழிலாக எடுத்துக் கொள்பவர்கள், எல்லா வற்றிலும் இலாபத்தை எதிர்பார்ப்பவர்கள் அதிகரித்து விட்டார்கள். அதன் விளைவு தான் மேற்கண்ட சீரழிவுகள் அனைத்தும்.

இப்பொழுது தமிழ் மக்களுக்குத் தேவையாக இருப்பது அவர்களை ஒரு சமூகமாக ஆக்கசக்தி மிக்க ஒரு தேசமாகக் கட்டியெழுப்பும் தலைவர்களும் சமூக உருவாக்கிகளும் கருத்துருவாக்கிகளும் ஊடகவியலாளர்களும் அறிவுஜீவிகளும் கலைஞர்களும் தான். தொழில்நுட்பத்தின் கைதியாகி விட்ட ஒரு இளைய தலைமுறையை இலட்சியவாதிகளாக மாற்றவல்ல தலைவர்களும் முன்னுதாரணங்களும் வேண்டும். கட்சிகளால், அமைப்புகளால், ஊடகங்களால், ஆலயங்களால், திருச்சபைகளால், புலனாய்வுத் துறைகளால் சிதறடிக்கப்பட்டு வரும் ஒரு சமூகத்தைக் கூட்டிக் கட்டவல்ல, முன்னுதாரணம் மிக்க தியாகிகள் முன்வர வேண்டும்.

தமிழ்மக்கள் ஆஞ்சநேயரைப் போல தமது பலம் எதுவென்று தெரியாமல் இருக்கிறார்கள். அவர்கள் ஒரே மூச்சில் சமுத்திரத்தைக் கடக்கும் பலம் மிக்க ஒரு சமூகம். அதை அவர்களுக்கு எடுத்துக்கூறவல்ல முன்னுதாரணம்மிக்க ஆளுமைகள் வேண்டும்.

தன் பலம் எது வென்று அறியாமல், ஒருவர் மற்றவரை நம்பாமல், ஏன் தன்னைத் தானே நம்பாமல், சீரழியும் ஒரு சமூகத்திற்கு வழிகாட்டவல்ல தியாகிகள் முன்வர வேண்டும். தாயகத்திலும் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும் உள்ள ஆளுமைகள் இந்த விடயத்தில் அவசரமாக ஒன்று திரள வேண்டும். முன்னுதாரணங்களை உருவாக்க வேண்டும்.

# யாழ்ப்பாணத்தில் மிக உயரமான கட்டிடத்தின்

(17ம் பக்கத் தொடர்ச்சி) பெயர் மாற்ற விவகாரம் தனக்கு முன்கூட்டியே தெரியாது என்றும் அவர் கூறியிருக்கிறார். ஆனால் அவரோடு வருகை தந்த புத்த சாசன அமைச்சருக்கு ஏற்கனவே அது தெரியும். ஏனெனில் அவர் சிங்களத் திருக்குறளையும் கையில் எடுத்துக் கொண்டே பேச வந்தார். ஆயின் அமைச்சர் சந்திரசேகரனுக்கு தமிழ் மக்கள் தொடர்பாக அரசாங்கம் எடுக்கும் முடிவுகள் அறிவிக்கப்படுவதில்லையா?

எதுவாயினும் யாழ் கலாச்சார மண்டபம் இதுவரை முழுமையாகத் திறக்கப்பட வில்லை என்பது தான் இக்கட்டுரை எழுதப்படும் நாள் வரையிலுமான அரசியல் யதார்த்தம் ஆகும். அப்பெருமண்டபம் இந்தியா ஈழத் தமிழர்களுக்கு வழங்கிய பரிசு மட்டுமல்ல, அது தமிழ் மக்களுக்கான தன்னாட்சி அதிகாரத்தின் அளவைக் குறிக்கும் ஒரு குறியீடு.தமிழ் மக்கள் தொடர்பாக இந்தியா கொழும்பின் மீது பிரயோகிக்கக்கூடிய அழுத்தத்தின் அளவைக் குறிக்கும் ஒரு குறியீடு என்பது தான் கடந்த பல ஆண்டு கால அரசியல் யதார்த்தம்.

# மகிந்தாவுக்கு வசிப்பதற்கு வீடில்லை

(8ம் பக்கத் தொடர்ச்சி) வாங்கியமை தொடர்பாக யோஷித்த ராஜபக்ஷவை சந்தேக நபராகப் பெயரிட போதுமான ஆதாரங்கள் இருப்பதாக சட்டமா அதிபரால் கடந்த 23ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அறிவித்தைத் தொடர்ந்து யோஷித்த ராஜபக்ஷ பெலியத்த பகுதியில் வைத்து கடந்த சனிக்கிழமை குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப் பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தர்.

# யாழில் போராட்டத்திற்கு தடை விதிக்க...

(3ம் பக்கத் தொடர்ச்சி) முன் வைத்து . ஜனாதிபதியின் கவனத்தினை ஈர்க்கும் முகமாக அமைதியான வழியில் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுக்க உள்ளோம். அமைதியான முறையில் பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் விடுக் காது, எமது கோரிக்கையை முன் வைத்து போராடவுள்ளனர் அதற்கு மன்று அனுமதி வழங்க வேண்டும் என விண்ணப்பம் செய்தார்.

சட்டத்தரணியின் விண்ணப்பத்தினை அடுத்து உயர் பாதுகாப்பு வலயமாக கட்டமைக்கப்படும் பகுதிக்குள் செல்லாது ஜனாதிபதி வரும் பாதையில் வீதிக்கு குறுக்காக செல்லாது வீதியின் ஓரமாக கவனயீர்ப்பு போராட்டத்தை அமைதியான முறையில் முன்னெடுக்க மன்று அனுமதித்தது.

# தமிழக மீனவர்கள் மீதான துப்பாக்கிச் சூடு தற்செயலானது என்கிறது கடற்படை!

எல்லைத் தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி காரைக்கால் மற்றும் தமிழக மீனர்கள் 13 பேர் மீது இலங்கை கடற்படையினர் துப்பாக்கிச்சூடு நடத்திய சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இச் சம்பவத்தில் இரண்டு மீனவர்கள் படுகாயமடைந்துள்ளனர். இதற்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் வெளியுறவுத்துறை அமைச்சகம் புதுடில்லியில் உள்ள இலங்கை தூதரை நேரில் அழைத்து, மீனவர்கள் மீதான துப்பாக்கிப் பிரயோகம் ஏற்புடையது அல்ல. இவ் விடயத்தில் உரிய வழிமுறைகளை பின்பற்ற வேண்டும் என கண்டிப்பாக கூறியுள்ளது இதே விடயததை இலங்கையிலுள்ள இந்திய தூதரகமும் இலங்கை அரசுக்கு தெரிவித்துள்ளது.

இவ் விடயம் தொடர்பிலான முதற்கட்ட விசாரணையில் இலங்கை கடற்படை வீரர் ஒருவரினால் தற்செயலாக நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டினால் இரண்டு இந்திய மீனவர்களும் காயமடைந்ததாக இலங்கை கடற்படைத் தளபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடற்தொழில் அமைச்சர் சந்திரசேகரன் அவர்கள் பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றுகையில் மீனவர்களின் தலைவர்களை நாங்கள் வினயமாக கேட்டுக் கொள்வது என்னவென்றால், நாங்கள் உங்களுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு தயார். உங்களுடைய பிள்ளைகள் எங்களுடைய தொப்புள்கொடி உறவுகள், எங்களுக்கு அண்மித்த நாடு அந்த வகையில் நாங்கள் நல்ல முறையில் எங்களுடைய உறவுகளை பேணி பாதுகாப்பதற்கே முயற்சிக்கின்றோம். அந்த முயற்சிக்கு வேட்டு வைக்கின்ற வேலையாகவே இந்திய தமிழ்நாட்டு மீனவர்களுடைய செயற்பாடுகள் காணப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

## Sasitharan Law Professional Corporation

10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6

Tel: **416.949.0404** / Fax: **416.948.0303** • **info@sasilaw.ca** • **www.sasilaw.ca**

---

# Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

## Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



**Vilosanan Sivatharman**
416-993-0826



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com







# இலங்கையின் பொறுப்புக்கூறல் விடயத்தில் அணுகுமுறையை மீளாய்வுக்கு உட்படுத்த பிரிட்டன் தீர்மானம்! அமைச்சர் தெரிவிப்பு!

பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கை அரசாங்கத் தரப்பிலிருந்து குறிப்பிடத் தக்களவிலான முன்னேற்றம் எதுவும் எட்டப்படவில்லை என தமிழ்ப் பிரதிநிதிகளிடம் விசனம் வெளியிட்டிருக்கும் பிரித்தானியாவின் இந்தோ - பசுபிக் பிராந்திய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் கத்தரின் வெஸ்ட், இவ்விடயத்தில் இலங்கை அரசாங்கத்துடன் பேணப்பட்டுவரும் அணுகுமுறையை தமது அரசாங்கம் மீளாய்வுக்கு உட்படுத்தவிருப்பதாக அறிவித்துள்ளார்.



இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு 27 ஜனவரி 2025 திங்கட்கிழமை இலங்கை சென்றடைந்த பிரித்தானியாவின் இந்தோ - பசுபிக் பிராந்திய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் கத்தரின் வெஸ்ட் 28 ஜனவரி 2025 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்திருந்தார்.

இதன் போது இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ பற்ரிக்குடன் இணைந்து நடாத்திய சந்திப்புக்களின் ஓரங்கமாக, கத்தரின் வெஸ்ட்டுக்கும் தமிழ்த்தேசிய கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு மு.ப 11.15 மணிக்கு யாழ் ஜெட்விங்க் ஹோட்டலில் நடைபெற்றது. இச்சந்திப்பில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறிதரன் மற்றும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்த பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் பிரித்தானியாவில் வாழ்வதாகச் சுட்டிக்காட்டிய கத்தரின் வெஸ்ட், அதன் காரணமாக இலங்கை தமிழர் விவகாரத்தில் தாம் பெரிதும் அக்கறை கொண்டிருப்பதாகத் தெரிவித்தார். அதன்பிரகாரம் அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தம், சமஷ்டி முறைமை உள்ளடங்கலாக தமிழர்களுக்கான அரசியல் தீர்வு மற்றும் பொறுப்புக்கூறல் ஆகிய இரு பிரதான விடயங்களில் தமிழர்களின் எதிர்பார்ப்பு மற்றும் தற்போது அடையப்பட்டிருக்கும் முன்னேற்றங்கள் என்ன என்பது பற்றி அறிந்துகொள்ள விரும்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு பொறுப்புக்கூறல் விவகாரத்தைப் பொறுத்தமட்டில், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் பிரிட்டன் முன்நின்று செயற்பட்டுவருவதாகத் தெரிவித்த கத்தரின் வெஸ்ட், இது பற்றி அரசாங்கத்தின் பிரதிநிதிகளுடன் தாம் கலந்துரையாடிய போதிலும், அவர்கள் ஓரிரு வார்த்தைகளிலேயே பதிலளித்ததாக கூறினார்.

அதனையடுத்து அவரது கேள்விக்குப் பதிலளித்த தமிழ்ப்பிரதிநிதிகள், 'தற்போதைய அரசாங்கம் தமிழர்களுக்கு இனப்பிரச்சினையே இல்லை என்ற நிலைப்பாட்டிலேயே இருந்து வருகிறது.

அதே போன்று பொறுப்புக்கூறல் செயன் முறையின் கீழ் எவரையும் நீதிமன்றத்தில் நிறுத்தப் போவதில்லை என்பதும் இவ்வரசாங்கத்தின் நிலைப்பாடாக இருக்கிறது. எனவே தமிழர்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தைப் பொறுத்தமட்டில், இந்த அரசாங்கம் தமிழர்களால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய பொருத்தமான தீர்வை வழங்கும் என்ற நம்பிக்கை எமக்கு இல்லை.

கடந்த காலங்களில் கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் அரசியல் தீர்வு குறித்து தமிழ் மக்களின் பிரதிநிதிகளுடன் குறைந்த பட்சம் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான நடவடிக்கைகளையேனும் முன்னெடுத்தது. ஆனால் இப்புதிய அரசாங்கம் அரசியல் தீர்வு குறித்து அதன் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் எதனையும் உள்ளடக்கவில்லை. தற்போது நடைமுறையிலும் எந்தவொரு நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை' என விசனம் வெளியிட்டனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கை நிலைவரங்கள் தொடர்பில் பிரித்தானியா உன்னிப்பாக அவதானம் செலுத்தவேண்டியதும், தமிழர்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வுக்குரிய அழுத்தங்களைத் தொடர்ந்து வழங்க வேண்டியதும் அவசியம் என்றும் அவர்கள் அமைச்சர் கத்தரின் வெஸ்ட்டிடம் வலியுறுத்தினர்.

அது மாத்திரமன்றி தற்போதைய அரசாங்கம் தமிழர்கள் தமக்குத்தான் ஆணை வழங்கியிருக்கிறார்கள் என்பது போன்ற கருத்துருவாக்கத்தைத் தோற்றுவிப்பதற்கு முயற்சித்து வருவதாக சுட்டிக்காட்டிய அவர்கள், அதனை முறியடிப்பதற்கு பாராளுமன்றத்தில் வட, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 19 பாராளுமன்ற உறுப்பினர்களில் தமிழ்த்தேசியக் கட்சிகளைச் சேர்ந்த 10 உறுப்பினர்கள் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதாகவும், அதனை இலக்காகக்கொண்ட ஒற்றுமை முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுவருவதாகவும் விளக்கமளித்தனர்.

அடுத்ததாக பொறுப்புக்கூறல் செயன்முறை தொடர்பில் கருத்துரைத்த சிறிதரன் மற்றும் கஜேந்திரகுமார், 'இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதிலும், அதற்கு அப்பால் எவ்வித முன்னேற்றமும் அடையப்படவில்லை.

எனவே இவ்விடயத்தைப் பொறுத்தமட்டில் பிரித்தானியாவும், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் ஏனைய நாடுகளும் ஒன்றிணைந்து இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்வதற்குரிய கொள்கை மட்டத்திலான தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும். அதனூடாக பொறுப்புக்கூறல் விடயத்தில் மாத்திரமன்றி, அரசியல் தீர்வு விடயத்திலும் அரசாங்கத்தின்மீது மறைமுக அழுத்தத்தைப் பிரயோகிக்க முடியும்' எனச் சுட்டிக்காட்டினார்.

அதனை செவிமடுத்த பிரித்தானிய அமைச்சர் கத்தரின் வெஸ்ட், பொறுப்புக்கூறல் விடயத்தில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அப்பால் இலங்கை அரசாங்கத் தரப்பிலிருந்து குறிப்பிடத்தக்களவிலான முன்னேற்றம் எதுவும் எட்டப்படவில்லை என்பதை ஏற்றுக்கொண்டார். இந்நிலையில் இவ்விடயத்தில் இலங்கை அரசாங்கத்துடன் பேணப்பட்டுவரும் அணுகுமுறையை தமது அரசாங்கம் மீளாய்வுக்கு உட்படுத்தவிருப்பதாகவும், இது குறித்து வெளிவிவகார அமைச்சு மட்டத்தில் ஆராய்ந்து தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

